செம்மணி

நிலம் 3 துகள் 118 வள்ளுவர் ஆண்டு 2052, 22 - 28 ஐப்பசி 2022 வாரமலர் பக்கங்கள் 22

# ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்கிய 2 காவல் அதிகாரிகள் மீது வழக்கு

## கொழும்பு நீதிமன்றில் தாக்கல் அழைப்பாணையும் அனுப்பப்பட்டது

இந்த மாதம் 10ஆம் நாள் கொழும்பு காலி முகத் திடலில் (கோல் பேஸ்) அமைதியாக எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தேவையற்று அடக்கிய உயர் காவல்துறை அதிகாரிகள் இருவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஊடகவியலார் தரிந்து ஜெயவர்த்தன தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்த கொழும்பு கோட்டை நீதிவான் திலினா கமகே, காவல்துறையின் இரு உயரதிகாரிகளையும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின்

பக்கம் 03



## உர நிவாரணத்துக்கு ஆசிய வங்கி உதவி

இம்முறை பெரும் போகத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு 1000 கோடி ரூபா நிதியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

பக்கம் 20

# 174 ஆதவு வாக்குகளுடன் நேற்று நிறைவேறியது 22

- சமல், நாமல் ஆதரவாக வாக்களிப்பு -மஹிந்த நழுவல்
- உறுதியானது இரட்டை குடியுரிமை கொண்டவர்களுக்கான தடை
- தேசிய பேரவை மீண்டும் உதயம்
- 2023 மார்ச் மாதத்துக்கு பிறகு அரச தலைவர் நாடாளுமன்றைக் கலைக்கலாம்

இலங்கை அரசமைப்பின் 22ஆவது திருத்தம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 174 வாக்குகள் கிடைத்தன. ஒருவர் மட்டும் வாக்களிப்பதைத் தவிர்த்தார்.

சிறிலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச உட்பட 44 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 44 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பின்போது நாடா-ளுமன்றத்தில் இருக்கவில்லை.

பக்கம் 03

# 22 நிறைவேறிவிட்டாலும்கூட புதிய அரசமைப்பு வேண்டும்

## மூத்த அரசியல் தலைவர் கரு ஜெயசூரிய வலியுறுத்து



அரசமைப்பின் 22ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் நாட்டிற்கு நன்மை பயக்கக்கூடிய புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார் மூத்த அரசியல்வாதியான கரு ஜெயசூரிய.

மக்களாட்சியை நேசிக்கின்ற அனைத்து

பக்கம் 03

# படைகளின் பயிற்சி கட்டணங்களைகூட செலுத்த முடியாது தவிக்கிறது இலங்கை

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

இந்தியாவில் பயிற்சிக்காக அனுப்பப்படும் இலங்கைப் படையினருக்கான சாதாரண கட்டணங்களைக்கூடச் செலுத்த முடியாத நிலையே இருப்பதாக இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அஜய் பட் தெரிவித்துள்ளார்.

காந்திநகரில் நடைபெற்ற பாதுகாப்பு கண்காட்சி நிகழ்வில் பேசிய அவர் இந்தியப் பொருளாதாரம் பலமானது என்று குறிப்பிட்டதுடன் தற்சார்பற்ற, தங்கி வாழும் பொருளாதாரத்தைக் கொண்டிருந்தால் என்ன நடக்கும் என்பதற்கு இலங்கையை உதாரணம் காட்டி உரையாற்றினார்.

"ஒரு நாட்டின்

பக்கம் 02

செம்மணி
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# புதிய அரசமைப்பே உடனடித் தேவை

அரசமைப்பின் 22ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதனை நிறைவேற்றுவதற்கு பொது ஜன பெரமுன கட்சி ஒத்துழைக்காது என்ற எதிர்பார்ப்புக்களையெல்லாம் தாண்டி 174 வாக்குகள் ஆதரவுடன் திருத்தம் நிறைவேறியுள்ளது. மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான ஆதர கிடைத்திருக்கிறது.

2015ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது அரசமைப்பின் 19ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. மக்களுக்கு நிறைவேற்று அரச தலைவர் முறைமையின் மீது அதிகரித்திருந்த அதிருப்தியின் விளைவாக, அந்த அதிகாரங்களைக் குறைத்து நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிக்கும் வகையில் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஆனால் 2019இல் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்த ராஜபக்சக்கள் 20ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை மேலும் பலப்படுத்தினார்கள்.

அந்த மாற்றம் நாட்டிற்குப் பேரழிவை ஏற்படுத்தியது. தனி மனிதனின் கைகளில் அளவுக்கதிகமான அதிகாரங் வழங்கப்படுவது பேராபத்தை விளைவிக்கும் என்று விடுக்கப்பட்ட எச்சரிக்கை எவ்வளவு நிதர்சனமானது என்பதை 20ஆவது திருத்தத்தின் மூலம் அளவு கடந்த அதிகாரங்களைப் பெற்ற முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச நிரூபித்தார்.

தன்னிச்சையான, ஒருதலைப்பட்சமான தனது முடிவுகளின் ஊடாக ஒட்டுமொத்த இலங்கையையும் படுகுழிக்குள் தள்ளிவிட்டார். மீள முடியாத பொருளாதார நெருக்கடிக்குள் நாட்டைச் சிக்க வைத்தார். அதன் பயனை நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டியிருக்கின்றது.

தமிழர்களுக்கு எதிரான போரை நடத்தும்போது சிங்களவர்களுக்குத் தேவையாக இருந்த நிறைவேற்று அதிகாரங்கங்கள் போர் முடிந்த நிலையில் இப்போது நாட்டுக்குப் பாரமாக மாறியிருப்பதால் அது அகற்றப்படவேண்டும் என்பதில் சிங்களவர்களும் முனைப்பாக இருக்கிறார்கள். ஆனால் நிறைவேற்று அதிகாரம் மட்டுமே இந்த நாட்டின் பிரச்சினை அல்ல.

இந்த நாடு பல்லின, பல மத மக்களும் பாதுகாப்பாக சமமாக மதிப்புடன் வாழக்கூடிய ஓரிடமாகக் கட்டியெழுப்பப்படவேண்டும். அதுவே தற்போதைய தேவை. அந்தத் தேவையை வலியுறுத் தியே அரகலய என்ற பெயரில் மக்கள் எழுச்சிகொண்டு போரா டினார்கள். அவசரமாக நிறைவேற்றப்படவேண்டிய, இலங்கையின் எதிர்காலத்திற்கு அவசியமான மாற்றம் அது.அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமான நடவடிக்கையல்ல. அது தற்போதைய ஆட்சியாளரால் மக்களின் நம்பிக்கையைப் பெற வழங்கப்பட்ட வாக்குறுதி ஒன்று மட்டுமே. 22 நிறைவேற்றப்பட்டுவிட்டதனால் மக்களாட்சி இலங்கையில் தளித்துவிட்டது என்று வாளாவிருந்து விட முடியாது.

இலங்கை மக்களாட்சி தளைக்கும் புதிய நாடொன்றாகப் பரிணமிப்பதற்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய, நீடித்து நிலைக்கக்கூடிய அமைதியை வழங்கக்கூடிய, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பளிக்கக்கூடிய முழுமையான மாற்றம் (சிஸ்டம் சேஞ்ச்) அவசியம். புதிய அரசமைப்பு ஒன்றின் மூலமே அது சாத்தியமாகும். அதிலும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவது உடனடித் தேவை. அரசமைப்பின் 22ஆவது திருத்தத்துடன் நின்றுவிடாமல் புதிய அரசமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதையும் காலந்தாழ்த்தாது உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுரகுமார திசநாயக்க, மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் மற்றும் மூத்த அரசியல் தலைவர் கரு ஜெயசூரிய ஆகியோரும் வலியுறுத்தியிருக்கிறார்கள். காலத்தை வீணடிக்காது அல்லது காலத்தை இழுத்தடிக்கும் உத்தியாகப் பயன்படுத்தாது இதயசுத்தியோடு புதிய அரசமைப்பை உருவாக்க அனைவரும் முன்வரவேண்டும்.

# மக்கள் கிளர்ச்சியின்போது கொல்லப்பட்ட நா.உ. குடும்பத்திற்கு ரூ. 1 கோடி இழப்பீடு

மக்களின் கிளர்ச்சியின்போது கும்பல் ஒன்றால் கொல்லப்பட்ட பொது ஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரின் குடும்பத்திற்கு ஒரு கோடி ரூபா இழப்பீடு வழங்க ஆட்சியார்கள் தீர்மானித்துள்ளனர். அமைச்சரவையில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது என்று தலைமை அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

பொது ஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான அத்துக்கோரள வைகாசி 9ஆம் நாள் கொல்லப்பட்டார். அரசுக்கு எதிராக காலி முகத் திடலில் போராட்டம் நடத்தியவர்கள் மீது அப்போதைய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதல் நாடு முழுவதும் தொடர் வன்முறைகளுக்கு வித்திட்டது.

நாட்டின் பல பகுதிகளிலும் பொது ஜன பெரமுனவின் ஆதரவார்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலக்கு வைக்கப்பட்டு தாக்கப்பட்டார்கள். அவர்களின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டன. நிட்டம்புவ நகரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துக்கோரளவின் வாகனத்தை மறித்த ஒரு கும்பல் அவர் மீது தாக்குதல் நடத்தியது.

பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அவர் தற்கொலை செய்துகொண்டார் என்று முதலில் தெரிவிக்கப்பட்டது. அவரது வாகனத்தை வன்முறைக் கும்பல் சுற்றிவளைத்ததைத் தொடர்ந்து மெய்க்காவலர்கள் கும்பல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்றும் அச்சம் காரணமாக அத்துக்கோறள தன்னைத்தானே சுட்டுக் கொண்டு இறந்துபோனார் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், காவல்துறை விசாரணைகளில் நாடாளுமன்ற உறுப்பினரும் அவரது மெய்க் காவலரும் அவர்களது வாகனத்தைப் பின்தொடர்ந்து வந்த கும்பல் ஒன்றால் கொல்லப்பட்டார்கள் என்று தெரியவந்தது.

அரச அலுவலர் ஒருவர் கடமையில் இருக்கும்போது உயிரிழந்தால் அதற்கான இழப்பீடாக இதுவரையில் 50 லட்சம் ரூபாயே வழங்கப்பட்டுவந்தது. அந்தத் தொகையை இரட்டிப்பாக்கி நாடாளுமன்ற உறுப்பினர் அத்துக்கோறளவின் குடும்பத்திற்கு வழங்குவது என்று கடந்த வாரம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக தலைமை அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

## படைகளின்...

முகாமைத்துவம் சரியாக இல்லையெனில் அது இலங்கையைப் போன்று ஆகிவிடும். பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மற்றவர்களிடம் உதவி கேட்கும் நிலமை ஏற்படும். இலங்கையின் மிக மோசமான நிலமை என்னவென்றால், பயிற்சிக்காக இந்தியா வரும் படையினரினரின் சாதாரண கட்டணங்களைக்கூட அவர்களால் செலுத்த முடியவில்லை. இந்த ஆண்டுக்கான கட்டணங்களை அடுத்த ஆண்டு அல்லது பணம் கிடைக்கும்போது செலுத்துகின்றோம் என்று கேட்கிறார்கள்" என்றார் அமைச்சர்.

இந்தியா இதுபோன்றில்லாமல் அனைத்து வழிகளிலும் தன்னிறைவை நோக்கிப் பயணிக்கின்றது என்றும் பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்பட்டால்கூட ஒரு வருட காலத்திற்குத் தாக்குப்பிடிக்கும் அளவிற்கு அது தன்னிறைவடைந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 174 ஆதவு...

திருத்தம் தொடர்பான 2 ஆம் வாசிப்பு மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பின்போது ஆதரவாக 179 பேர் வாக்களித்தனர். நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான சரத் வீரசேகர எதிர்த்து வாக்களித்தார். திருத்தங்களை உள்வாங்கிய பின்னர் குழுநிலையின்போது (மூன்றாம் வாசிப்பு) ஆதரவாக 174 வாக்குகள் வழங்கப்பட்டன. ஒருவர்கூட எதிர்த்து வாக்களிக்கவில்லை.

இதையடுத்து 22 ஆவது திருத்தச்சட்டமூலம் திருத்தங்கள் சகிதம் நிறைவேற்றப்பட்டது என சபாநாயகர் அறிவித்தார். சபாநாயகர் கையொப்பமிடும் நாளில் இருந்து, அது அமுலுக்கு வரும். '22' ஆவது திருத்தச்சட்டமூலம் என விளிக்கப்பட்டிருந்தாலும் அரசமைப்பிற்குள் 21 ஆவது திருத்தச் சட்டமாக உள்வாங்கப்படும்.

இரட்டை குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிப்பதற்கு தடை விதிக்கும் ஏற்பாடு 22 ஆவது திருத்தத்தில் நீக்கப்படாததை அடுத்து எதிர்க் கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி, பெரமுன கட்சியிலிருந்து பிளவுண்ட அணி ஆகியனவும் 22ஐ ஆதரித்து வாக்களித்தன.

அமெரிக்க நாட்டுக் குடியுரிமையையும் கொண்டுள்ளவரான பஸில் ராஜபக்சவை இலக்கு வைத்த நகர்வே இதுவென பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தபோதும் பெரமுனவின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்தனர்.

பஸிலின் சகாக்களான சாகர காரியவசம், ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, ரோஹித, சஞ்சீவ எதிரிமான்ன, பிரசன்ன ரணதுங்க, பவித்ரா உள்ளிட்ட எம்.பிக்கள் இன்றைய வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. மஹிந்த வராவிட்டாலும் சமல் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச ஆகியோர் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

நாடாளுமன்ற அமர்வு தொடங்கிய நாளில் இருந்து நான்கரை வருடங்களுக்கு பிறகே அரச தலைவரால் நாடாளுமன்றத்தை கலைக்க முடியும் என்ற ஏற்பாடு அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உள்வாங்கப்பட்டது. அந்தக் கால எல்லை '20' இல் இரண்டரை வருடமாக்கக் குறைக்கப்பட்டது. '22' இலும் இரண்டரை வருடம் என்ற ஏற்பாடே தொடர்கின்றது.

இதன்படி தற்போதைய அரச தலைவர் 2023 பங்குனி மாதத்தின் பின்னர் எப்போது வேண்டுமானாலும் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பார். அரச சேவையில், அரசியல் தலையீடுகளை தவிர்த்து, சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளும் நோக்கில் உருவாக்கப்பட்ட அரசமைப்பு பேரவை, '20' ஊடாக நீக்கப்பட்டது. அதற்கு பதிலாக நாடாளுமன்ற பேரவை கொண்டுவரப்பட்டது. எனினும், 22 ஊடாக அரசமைப்பு பேரவை மீண்டும் உருவாக்கப்படவுள்ளது. பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம்பெறும். சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை மேற்படி பேரவையே அரச தலைவருக்குப் பரிந்துரைக்கும். மத்திய வங்கி ஆளுநர் நியமனம்கூட அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடனேயே இடம்பெறவேண்டும்.

22ஆவது திருத்தத்தின் மூலம் அரச தலைவர் அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சை மட்டும் வகிப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் எண்ணிக்கை 30 ஆகவும், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 40 ஆகவும் இருக்க வேண்டும் என்ற ஏற்பாடு '22' இலும் தொடர்கின்றது.

## ஆர்ப்பாட்டக்காரர்களை...

பட்டியலில் சேர்த்துக்கொர்வது என்று வெள்ளிக்கிழமை முடிவு செய்தார்.மூத்த காவல் அத்தியட்சகர் ரொஷான் டயஸ் மற்றும் உதவி காவல் அத்தியட்சகர் நளின் டில்ருக் ஆகிய இருவரையும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க அனுமதித்த நீதிவான் அவர்கள் இருவருக்கும் அழைப்பாணை அனுப் பவும் கட்டளையிட்டார்.

அரகலய மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கொல்லப்பட்டதையும் காயமடைந்ததையும் நினைவுகூரும் வகையில் ஐப்பசி (ஒக்டோபர்) 9ஆம் நாள் ஒழுங்கு செய்யப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு எதிராக காவல்துறையினர் நடந்துகொண்ட விதத்தைக் கண்டித்து மறுநாள் சட்டத்தரணிகள் உள்ளிட்ட தொழிற்றுறையினர் காலி முகத் திடலில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அந்தப் போராட்டத்திற்கு முறையான அனுமதி பெறப்பட்டிருந்தும் போராட்டம் தொடர்பில் கோட்டை காவல் நிலைய பொறுப்பதிகாரிக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்ததுடன் காவல் மா அதிபருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தும் போராட்டக்காரர்களின் உரிமையை மறுக்கும் வகையில் அந்தப் போராட்டத்தைக் காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர் என்று தரிந்து ஜெயவர்த்தன தனது மனுவில் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இரு காவல் அதிகாரிகளும் இலங்கைத் தண்டனைக் கோவைச் சட்டம் 330இன் கீழும் பிரிவு 59இன் கீழும் தண்டனைக்குரிய குற்றங்களைப் புரிந்துள்ளனர் என்று மனுவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அரச தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ், சட்டத்தரணிகள் மனுஜ டி சில்வா, ஜயந்த தெகியத்தகே ஆகியோர் மனுதாரர் சார்பில் நீதிமன்றில் முற்பட்டிருந்தனர்.

## 22 நிறைவேறி...

இலங்கையர்களுக்கும் கிடைத்த வெற்றி அரசமைப் பின் 22ஆவது திருத்தம் என்று தெரிவித்திருக் கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலை வருமான அவர்.

இந்த மாற்றத்திற்காக உழைத்த அனைத்து பொது அமைப்புக்களிற்கும் மக்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் முதல் அமைப்பாக சமூக நீதிக்கான தேசிய இயக்கம் இருப்பதில் பெருமையடைகின்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார். கரு ஜெயசூரியவே அந்த அமைப்பின் தலைவர்.

"முன்னாள் அரச தலைவரின் ஆசைகள் அடையப்படுவதற்காக அரசமைப்பின் 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டபோது அதனை உறுதியாக எதிர்த்தது எமது அமைப்பு. திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் அதனை எதிர்த்தது. 22ஆவது திருத்தம் நாட்டின் மக்களாட்சியைப் பாதுகாப்பதற்கும் மக்களின் மதிப்பையும் அவர்களின் எதிர்பார்ப்பையும் பூர்த்திசெய்வதற்குமான கடைசி உறுதியான அடியென்றோ போதுமான நடவடிக்கை என்றோ நாம் ஒரு போதும் கருதவில்லை என்பதையும் ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தற்போது நாடாளுமன்றத்தால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை முன்னேற்றகரமான அரசமைப்பு மாற்றம். புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படும்வரை இந்த மாற்றம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். நாம் இது ஒரு குறிப்பிடத்தகுந்த அடைவு என்று வரவேற்கும் அதேவேளை, நாட்டுக்கு நன்மைபயக்கக்கூடிய புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்பதிலும் விட்டுக்கொடுக்காத நிலைப்பாட்டைக்கொண்டுள்ளோம்" - என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# சிங்கள மொழியின் அவசியம்

**நாகராசா**

தமிழ் ஊடகத்துறையைச் சோர்ந்த ஒருவர் தனது நண்பர் ஒருவரிடம் எனக்கு அவசரமாகச் சிங்களம் படிக்கவேணும் என்று சொன்னார். நீ நினைக்கிற வேகத்தில் சிங்களம் படிக்க முடியாது. முதலில் அந்த மொழியைப் படிக்க வேண்டும் என்ற விருப்பமும் ஆர்வமும் உனக்கு ஏற்பட வேண்டும் என்று அதற்கு நண்பர் பதிலளித்தார்.

தமிழ் அரசு என்ற எண்ணம் சிங்கள மொழியைப் படிக்கக்கூடாது என்பதை மறைமுகமாகத் தமிழர்களுக்குக் கூறியது. ஆனால் இவ்வாறு தமிழ் மக்களுக்குச் சொல்லி அரசியல் செய்பவர்களும் அவர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளும் சிங்கள மொழியை நன்கு கற்றார்கள். இலங்கை அரசின் உயர் பதவிகளையும் பெற்றார்கள். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை சிங்களம் கற்கக் கூடாது என்பவர்களின் வீட்டு மதில்களில் சிங்கள வகுப்புக்களுக்கான விளம்பரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நகரக் கடைகளிலும், வீட்டு நிகழ்வுகளிலும் சிங்களப் பாடல்கள் ஒலிக்கின்றன. சிங்கள மொழியின் அவசியத்தைப் புரிந்துகொண்டவர்களின் இந்தப் போக்கை அரசியல்வாதிகளால் தடுக்க முடியவில்லை. தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள மொழியும் சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மொழியும் பாடவிதானங்களாக உள்ளன.

### மேரி லட்சுமி

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கிய நபர்களுள் ஒருவர் மருத்துவர் ஈ.எம்.வி.நாகநாதன். அவரது மகள் மேரி லட்சுமி. இவர் இலங்கைக்கான இஸ்ரேல் தூதராகக் கடமையாற்றினார். சிங்கள எழுத்துக்களே தமிழ்ப் பகுதியில் இருக்கக் கூடாது என்று சிங்கள விளம்பரப் பலகைகளுக்கு சாணமும், கழிவு ஒயிலும் பூசிய கட்சியின் உறுப்பினரான நாகநாதனின் மகள் சிங்கள அரசின் தூதராகப் பணிபுரிந்தார்.

### சாணக்கியனின் சிங்களம்

சாணக்கியனின் பேரனான ராசமாணிக்கம் தமிழர்கள் சிங்களம் படிக்கக்கூடாது என்பதில் அக்கறையாக இருந்தார். அவரது மகன் ஒரு மருத்துவர். அவர் சிங்களப் பெண்ணைத் திருமணம் செய்தார். அவர்களது பிள்ளையான சாணக்கியன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி நாடாளுமன்றில் முதன் முதலாகச் சிங்கள மொழியில் உரையாற்றினார். அது அவரது தாய் மொழியாக இருந்தது.

சிங்கள மொழியில் உரையாற்றும்போது ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார். இங்கு தமிழில் பேசினால், பெரும்பாலான சிங்கள உறுப்பினர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள மொழி பெயர்ப்புக் கருவியைக் காதில் அணியாது கழற்றி வைத்துவிட்டு இருக்கிறார்கள். இங்கு என்ன பேசப்படுகிறது என்பதை அவர்கள் செவிமடுப்பதில்லை என்றார். அவரது கட்சியில் தமிழ் மட்டும் தெரிந்தவர்களே அதிகம். அவர்கள் ஆக்ரோசமாகத் தமிழில் கத்துவதால்தான் சிங்கள மொழியில் பேச வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. இதன் மூலம் சாணக்கியனுக்குச் சிங்கள மொழியின் அவசியம் புரிந்திருக்கிறது. இந்தப் பின்னணியில் எந்த அரசியல்வாதியும் தமிழ் மக்கள் சிங்களம் படிக்கக்கூடாது என்று தடுக்க முடியாது.

### புலிகளின் சிங்களம்

சிங்களப் படையினருக்கும், சிங்கள மக்களுக்கும் கூறுவதற்காக சிங்கள மொழியைத் தமது புலனாய்வுப் பிரிவினருக்குக் கற்பித்ததுடன் கொட்டி கண்ட (புலிகளின் குரல்) என்ற வானொலிச் சேவையையும் தொலைக்காட்சி செய்திச் சேவை ஒன்றையும் புலிகள் ஒலிபரப்பினர். தேதுன்ன (வானவில்) என்ற சிங்களப் பத்திரிகையும் எக்னலிகொட என்ற சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் மூலமாகச் சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றார்கள். அந்த அடிப்படையில் புலிகளும் சிங்கள மொழியின் முக்கியத்துவத்தைப் புரிந்திருந்தார்கள்.

### சிங்கள மொழியில் தமிழ்ச் சொற்கள்

தமிழ் மொழி இந்தியாவின் மிகப் பழைய மொழியாகும். அதன் ஆரம்ப வரிவடிவத்தை மொழியியலாளர்கள் தமிழி என்கிறார்கள். பாளி, சமஸ்கிருதம், தமிழ், இங்கிருந்த பூர்வீக மொழியான எலு ஆகிய மொழிகளைக் கலந்து உருவானதுதான் சிங்களம். 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் சிங்களத்தில் அதே அர்த்தத்தில் கலந்திருக்கின்றன.

இலங்கை அநநியராட்சிக்கு உட்பட்டிருந்தபோது சிங்களவரும் தமிழரும் அந்நியரின் மொழிகளைக் கற்று உயர் பதவிகளையும் சன்மானங்களையும் பெற்றனர். அந்நியர்களிடமிருந்து





# போதைப் பொருளைக் கட்டுப்படுத்துவது பெரும் சவால்

**விதுரன்**

கை விலங்கிடப்பட்ட நிலையில் சிங்கள இளைஞன் ஒருவன் உடல் நடுங்கியபடி கதறியழுகிறார். கைது செய்யப்பட்டிருக்கும் அவன் காவல்துறையினரிடம் தனக்குக் ஹெரோய்ன் தூள் சரை ஒன்றை வாங்கித் தருமாறு கெஞ்சுகிறான். இதைக் காணொலி வடிவில் சமூக வலைத்தளத்தில் பார்க்கக் கிடைத்தது. எங்கே ஹெரோய்ன் வாங்கலாம் என்று அவனிடம் கேட்க, தான் எங்கேயோ ஓரிடத்தில் மறைத்து வைத்திருக்கிறேன் என்று கூறி அதை எடுத்துத் தருமாறு காவல்துறையினரிடம் கெஞ்சுகிறான். போதைப் பழக்கத்துக்கு அடிமையாகிப் பாடசாலை மாணவர்கள் மிக மோசமாகச் சீரழிந்திருப்பதை அந்தக் காணொலி மூலம் உணரமுடிந்தது.

இந்த நிலை யாழ்ப்பாணத்திலும் நன்கு பரவியிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவது அவ்வளவு இலகுவான காரியமாக இருக்கப்போவதில்லை. ஏனெனில் அவர்களின் மர்மமான வலைப்பின்னல் அத்தகையது.

போதைப் பொருள் பாவனை அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து தொண்டு நிறுவனங்கள், சமயப் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள் எனப் பலரும் அதைக் கட்டுப்படுத்தும் கருத்துகள், செயல்களை வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கின்றனர். ஊரூராகச் சென்று போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த அனைத்து அரசியல் கட்சிகளும் முன்வர வேண்டும் என்றுள்ளார் சிவாஜிலிங்கம். மருத்துவர்கள், சமூக அமைப்புகள் எனப் பலதரப்பினரும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் இறங்கியிருக்கின்றனர்.

**போதைப் பொருள் கடத்தல், விற்றல், பாவனை**

போதைப் பொருள் விடயத்தில் 3 தரப்பினர் தொடர்புபடுகின்றனர். போதைப் பொருளைக் கடத்துபவர்கள் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். மன்னார், தீவுப்பகுதி, வடமராட்சி கிழக்குக் கடற்பரப்புகளூடாகவும் போதைப் பொருள்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றன. பெண்கள், சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், போன்ற பலரும் இந்தக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்படுகின்றனர். ஊர்களில் வேலை வாய்ப்புகள் இல்லாமல் கூட்டம் சேர்த்து ஊர்சுற்றித் திரியும் இளைஞர்கள் இதன்பால் ஈர்க்கப்படுகின்றனர்.

போதைப் பொருள்களைக் கடத்துவோரிடம் பெரிய வலைப்பின்னல்

விடுபட்ட பின்னர் தமிழ் அரசியல்வாதிகள் சிங்களவர் மீதான வெறுப்பைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காகச் சிங்கள மொழியை மட்டுமல்ல ஸ்ரீ என்கிற எழுத்தைக்கூட ஆயுதமாகப் பயன்படுத்தினர்.

1956இல் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் ஒன்றைப் பெருமெடுப்பில் செய்தனர். வாகனங்களில் இருந்த சிங்களச் சிறி எழுத்தை மாற்றிச் ஸ்ரீ என்று எழுதினார்கள். தமிழ் எழுத்து வடிவில் ஸ்ரீ என்றொரு எழுத்தே இல்லை. சமஸ்கிருதச் ஸ்ரீ எழுத்தை குறிப்பிடுவதற்காகத் தமிழில் புகுத்தப்பட்ட வரி வடிவமே அது. தமிழில் சிறி என்றே எழுத வேண்டும். அவ்வாறு தமிழில் யாரும் எழுதவில்லை.

**இரண்டாம் மொழியாகச் சிங்களம்**

தமிழ் அரச ஊழியர்கள் இரண்டாம் மொழியாகச் சிங்கள மொழியைக் கற்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டபோது தமிழ்ப் பற்றுள்ள பல ஊழியர்கள் சிங்களம் படிக்க மாட்டோம் என்று தமது பதவியைத் துறந்த சம்பவங்களும் நடந்தன. தற்போது அவர்களின் பேரப்பிள்ளைகள் பாடசாலைகளில் சிங்களம் கற்று வருகின்றனர்.

வடக்குக் கிழக்குத் தமிழர்களின் அயலவர்கள் சிங்களவர்களே தவிர தமிழ் நாட்டுத் தமிழர்கள் அல்லர். அந்த வகையில் சிங்கள அயலவர்களை நண்பர்களாகவோ, எதிரிகளாகவோ நினைத்தால்கூட இரண்டு நிலைப்பாடுகளுக்காகவும் சிங்களம் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் தமிழருக்குண்டு. இதற்குச் சாணக்கியன் ஒரு முன்னுதாரணம். சிங்களம் கற்கக் கூடாது என்று அடம்பிடித்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியல் இருந்துகொண்டு சிங்கள மொழி பேசுவது காலம் கொடுத்த யதார்த்தமே.

உண்டு. இதில் ஏற்படும் போட்டி காரணமாகப் பலர் கொல்லப்பட்டுமுள்ளனர். போதைப் பொருள் பாவனைக்கு எதிராகக் களமிறங்குபவர்களைப் போதைப் பொருள் கடத்தல்காரர்கள், விற்பனை செய்வோர், பயன்படுத்துவோர் குறிவைக்கின்றனர். இலகுவாகப் பணம் உழைக்கும் வியாபாரமான இது அவர்களுக்கு இனிக்கிறது.

**தமிழ்ச் சட்டத்தரணிகளின் ஆதரவு**

போதைப் பொருள் பாவனையைத் தடுக்க முற்படுபவர்கள் முதலில் தமிழ்ச் சட்டத்தரணிகளைத் திருத்த வேண்டும். ஆங்காங்கே ஒரு சிலரையாவது காவல்துறையினர் இதுவிடயமாக அவ்வப்போது கைது செய்யும் போது பெருந்தொகைப் பணத்தை வாங்கிக் கொண்டு அவர்களைச் சட்டத்தின் பிடியிலிருந்து மீட்பவர்களாகத் தமிழ்ச் சட்டத்தரணிகள் இருக்கின்றனர். போதைப் பொருள் கைது விடயங்களில் தமிழ்ச் சட்டத்தரணிகள் நீதிமன்றில் முன்னிலையாகக் கூடாது என்பதை முக்கிய கோரிக்கையாக முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு செய்தபின்னரே இலங்கை அரசு போதைப் பொருள் விடயத்தில் தமிழர் பகுதிகளில் திட்டமிட்டுச் செயற்படுகிறது என்ற குற்றச்சாட்டை முன்வைக்க முடியும். இதைப் பணம் உழைக்கும் மார்க்கமாகத் தமிழ்ச் சட்டத்தரணிகள் வைத்திருக்கும்போது இலங்கை அரசையோ, காவல்துறையினரையோ குற்றம் சாட்டுவது தவறானது.

**பாடசாலை மாணவர் விடயம்**

பாடசாலை மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகும் விடயத்தில் பாடசாலை நிர்வாகத்தைக் குறை சொல்வது ஏற்புடையதல்ல. பாடசாலையில் மாணவர்கள் காலை 7.30 - 1.30 வரையான காலப்பகுதியில் நிற்கின்றனர். நாளில் வெகுநேரத்தைப் பாடசாலைக்கு வெளியே கழிப்பதால் தமது பிள்ளைகள் எங்கு நிற்கிறார்கள், என்ன செய்கிறார்கள், யாருடன் பழகுகிறார்கள் என்பதை கவனிப்பது பெற்றோர்களின் பொறுப்பு. இதுவிடயத்தில் அதிக பொறுப்பு குடும்பத்துக்கே உண்டு. குடும்பம் மிக வறுமையான சூழலில் சமுர்த்தி நிவாரணம் பெறும் நிலையில் இருக்கும்போது அவர்களின் பிள்ளையின் கையில் 1 லட்ச ரூபாவுக்கு மேல் பெறுமதியான அலைபேசி இருக்கிறது.



> போதைப் பொருளை நீண்ட நாள்காக உட்கொள்பவர் சகோதரி, பிள்ளையை வன்புணரும் நிலையும் பணம் கொடுக்காவிட் டால் பெற்றோரை அடித்துப் பணம் பெறும் நிலையும் சாதா ரணமாகி விட்டது

**ஆலயங்களின் பங்களிப்பு**

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை 5 குடும்பங்களுக்கு ஒரு இந்துக் கோவில் இருப்பதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. கிறிஸ்தவ தேவாலயங்களும் அவற்றுக்குச் சளைக்காமல் பல்கிப் பெருகி வருகின்றன. இவற்றில் ஒழுக்கநெறி மேம்பட்டிருந்தால் இருவர் சண்டை பிடிப்பதாக இருந்தால்கூட பூக்களால் எறிந்து சண்டைபிடிக்கும் அளவுக்குப் பண்பட்டிருக்க வேண்டும். ஆனால் நிலமை எதிர்மறையாகவுள்ளது. இளைஞர்கள் வாள் வெட்டில் மிகச் சாதாரணமாக ஈடுபடுகின்றனர். ஆலயங்களின் சுற்றுவட்டாரங்களில் வெற்று மதுப்போத்தல்களும் பியர் கலன்களும் மிகச் சாதாரணமாக வீசப்பட்டுக் கிடக்கின்றன. இதையாவது கட்டுப்படுத்துவதற்கு ஆலயத் தரப்பினர் முன்வர வேண்டும்.

**குடும்ப வன்முறைகள்**

போதைப் பொருளை நீண்ட நாள்காக உட்கொள்பவர் சகோதரி, பிள்ளையை வன்புணரும் நிலையும் பணம் கொடுக்காவிட்டால் பெற்றோரை அடித்துப் பணம் பெறும் நிலையும் சாதாரணமாகிவிட்டது. பல ஊர்கள் போதைப் பாவனை ஊர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில் நாளுக்கு நாள் புதிய ஊர்கள் சேர்க்கப்படுகின்றன.

**மறுவாழ்வு முகாம்களில் நிலமை**

சிறைச்சாலை, அச்சுவேலியிலுள்ள மக்கோனா என்றழைக்கப்படும் மறுவாழ்வு மையங்கள் ஆகிய இடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் வெளியே விட்டதும் போதைப் பொருளைப் பாவிக்கும் மன நிலையிலேயே இருக்கின்றனர். அண்மையில் அந்த மையங்களுக்குச் சென்று கலர் பென்சில்கள், வெள்ளைத் தாள்களைக் கொடுத்து நீங்கள் எதிர்காலத்தில் எப்படி ஆகவிருக்கிறீர்கள் என்பதைப் படமாகக் கீறிக் காட்டுங்கள் என்று கேட்டபோது தலைமயிர், தாடி, காதில் தோடு போட்ட நபர் சுருள் சுருளாகப்

புகை விடுவது போன்ற தோற்றத்தையே அங்குள்ள பெரும்பாலானவர்கள் வரைந்தனர். விபரீதமான ஆசைகளாக இருந்தன. இது அவர்களின் மனநிலையை அறிந்துகொள்ளப் போதுமானது.

நிலமைகள் இவ்வாறிருக்கும்போது போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த நினைப்போர் இவையெல்லாவற்றையும் தாண்டிச் செயற்படுவது பற்றிச் சிந்திப்பது அவசியம். கடும் தண்டனைகள் மூலமே இவற்றைத் தடை செய்ய முடியும். இதைவிடக் கட்டுப்படுத்துபவர்களின் செயற்பாடுகள் மிகவும் இரகசியமாக இருப்பது கட்டாயமாகும். இல்லாவிடில் போதை மாபியாக்களாலும், வாள் வெட்டுக்குழுக்களாலும் பழி தீர்க்கப்படும் படலம் நிகழும் ஆபத்தும் உண்டு. போதைப்பொருளைப் பாவித்தவர் படுகின்ற அவஸ்தையை முகநூல், இணையத்தளங்கள், சிறைகளில் உள்ளவர்கள், பாடசாலை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துவதன் மூலம் அதன் குரூரத்தை ஊட்ட முடியம். போதைப்பொருள் குறித்த பயமும் மனநிலை மாற்றமுமே நல்ல விளைவுகளைத் தேடித்தரும்.

---



**மருத்துவர் சி. யமுனாநந்தா**

# டிஜிற்றல் மூளையில் போதைப்பொருள்...!

உள மருத்துவர்களின் புதிய பரிமாணமாக எண்மான உள மருத்துவர் (Digital Psychiatrist) உருவாகி உள்ளார். கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் உள மருத்துவ சிகிச்சையில் இது தொடர்பான தொடக்க அணுகுதல்கள் உருவாக்கப்பட்டன. இதன் மூலம் மனச்சோர்வு, உளப்பிளவு, பதகளிப்பு, உயிர்மாய்ப்பு முயற்சிகளுக்கு உரிய மருத்துவ சேவையினை வழங்க முடிந்துள்ளது. எண்மானத் தரவுகளினை நேரடித் தரவுகள், மறைமுகத் தரவுகள் என இரு வகைகளில் பெறலாம். இதன் பயன்பாட்டை உளநலச் செயலிகள் (mHealth Apps) மூலம் நடைமுறைப்படுத்தலாம்.

தற்போது எமது பிரதேசத்தின் பிரதான சமூக உளப் பிரச்சினையாக உள்ள போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த எண்மான உள மருத்துவரை நாம் நாடலாம். இதன்போது தனிநபர் தகவல் இரகசியமாக அமைவதுடன் போதைப்பொருள் பாவிப்போர் ஒன்று சேர்வது, மீளவும் பாவிப்பது குறைக்கப்படும்.

**உளநலச் செயலி**

உளநல மருத்துவர்கள், தொடக்க சுகாதார சேவையாளர்கள், பெற்றோர்கள், உறவினர்கள், உளவள ஆலோசகர் உட்பட பல்துறைசார் முறைமையில் எமது பிரதேசத்திற்கு உளநலச் செயலி உருவாக்கப்படல் வேண்டும்.

போதைப்பொருள் பாவிப்பவர்கள், கணணி விளையாட்டிற்கு அடிமையானவர்கள், சமூக வலைத்தளத்துப் பாவனையாளர்கள் என்பவர்களை எண்மான உள மருத்துவர் இலகுவாகக் கையாளுவர். இதற்கு செயலிகளை தொடுகை காண்பேசிகளில் சுலபமாக அணுகும் கட்டமைப்பினை உருவாக்கலாம். மேலும் பல மனநோய் நிலைக்கு உட்பட்டவர்கள் தமக்கு உரிய சிகிச்சைகளை உளநலச்செயலி மூலம் அணுகலாம்.

ஆபத்தான பழக்க வழக்கத்தில் உள்ளவர்கள் சுயமாகவே உள மருத்துவ சிகிச்சையை நாட உளநலச் செயலிகள் உறுதுணையாக அமையும். ஏனையவர்களுக்குத் தெரியாது. எனவே சிகிச்சையை நாடுவோர் எண்ணிக்கை அதிகமாகும். எனவே சமூகத்தில் புரையோடியுள்ள போதைப்பொருள் பாவனையில் இருந்து எமது சமூகத்தைக் காக்க எமக்குத் தேவையான எண்மான உள மருத்துவ மென்பொருளை நாம் விரைவில் உருவாக்குதல் மிகவும் அவசியமானது.

மின்னணு மனிதம் எனும் மனிதன் கணினி இடையுறவில் மனிதனின் உளநோய்களைத் தீர்ப்பதற்கு எண்மான உளமருத்துவர் என்ற நிலை மிக முக்கிய பங்கினை வகிக்கும். இதன் தொடக்க நிலைகளை இன்று நாம் எமது சமூக விரவல் வலைத்தளங்களில் உருவாக்கலாம். போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான நவீன அணுகுமுறையாக எண்மான உள ஆற்றுப்படுத்தல் அமையும். குறிப்பாக போதைப்பொருள் பாவனையைத் தொடக்கும் வயதினரான 15 - 25 வயதானவர்களின் காண்பேசிகளில் போதைப்பொருளினை அணுகும் தன்மையைக் கண்டறிந்து கட்டுப்படுத்த விசேட உளநலச் செயலிகளை நடைமுறைப்படுத்தலாம். இதன்மூலம் அவ்விளையவர்களுக்கு எண்மான உளமருத்துவர் சேவை செய்வார்.

79

சிறைக்குள்...



தர்மராசா

# கூரை மீது ஏறிப் போராட முன்வந்த சக கைதிகள்

நாம் கூரை மீது ஏறிய பின்னர் கிழே நின்றுகொண்டிருந்த கைதிகளிடம் இருந்து பல்வேறு பொருள்களைப் பெற்றோம். கீழே நின்ற கைதிகள் பொருள்களை நூல்களில் கட்டிவிட மேலே இருந்தவர்கள் இழுத்து அவற்றை எடுத்தார்கள். சாரத்தைக் கிளித்துத் துண்டுகளாக்கி அந்தத் துண்டுகளைத் தொடுத்துக் கயிறாக்கி அதைக் கீழே விட்டுப் பிளாஸ்ரிக் பாய்கள், பழைய தும்புத்தடிகள் ஆகியவற்றை மேலே எடுத்தோம். பிளாஸ்ரிக் வாளிக்குள் மண் நிரப்பி அதன் நடுவில் தடி ஒன்றை நட்டுத் தற்காலிகக் கூடாரம் ஒன்றை அமைத்தோம். அதன் மூலம் நிழல் கிடைத்தது. ஆனாலும் கூரையில் இருக்கமுடியாத அளவுக்குச் சூடாக இருந்தது.

சிறிய பிளாஸ்ரிக் வாளிகளில் கீழேயிருந்து தண்ணீர் எடுத்துக் கூரை மீது ஊற்றியபோது சூடாகியிருந்த கூரை உடனடியாகக் காய்ந்தது. நீண்ட நேரப் பிரயத்தனத்தின் பின் சூடு ஓரளவுக்குக் குறையவும் சூரியன் மறையவும் சரியாக இருந்தது.

சிறைச்சாலைக் கூரை மட்டமான தளமாக அல்லாமல் நடுவில் சற்று உயரமாகவும் ஓரங்கள் சரிவாகவும் இருந்தன. மழை பெய்யும்போது நீர் வழிந்தோடக்கூடிய வகையில் அந்தக் கொங்கிறீட் கூரை அமைக்கப்பட்டிருந்தது. இரவு அதன்மேல்தான் படுத்துறங்கி னோம். கூரையின் உயரமான பகுதியில் தலையை வைத்துப் படுத்தோம். நித்திரையில் உருளும் பழக்கம் இருந்தால் நிச்சயம் சாவுதான்.

நாம் கூரையில் ஏறியவுடன் டி பிரிவுக் கட்டடக் கூரை மீது ஏறியிருந்த நண்பர்களுக்கு மிகவும் உற்சாகமாக இருந்தது. கைகளை அசைத்தும், சத்தமிட்டும் தமது நன்றிகளைத் தெரிவித்தார்கள். ஈ பிரிவுக் கூரையில் இருவர் ஏறியிருந்தார்கள். பி பிரிவில் உள்ள நண் பர்கள் பலர் மெதுவாக எட்டிப்பார்த்துவிட்டு மறைந்து போனார்கள். பலர் உணர்வுபூர்வமாக இருந்தாலும் உடல் திடகாத்திரமாக இல்லாததாலும் ஏற்கனவே இதுபோன்ற போராட்டங் களில் ஈடுபட்டு உடல் பாதிக்கப்பட்டவர்களாக இருந்ததாலும் ஈடுபாட்டைத் தவிர்த்தனர். இந்தப் போராட்ட விடயத்தில் யாரையும் வற்புறுத்த முடியாது.

எனினும் பி பிரிவில் நாம் கூரையில் ஏற முன்னர் போராட்டம் பற்றிக் கைதிகள் மத் தியில் இருந்த கருத்து பின்னர் மாறிவிட்டதைக் காணமுடிந்தது. நாம் ஏறும்போது நிலமை இவ்வாறிருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. கொஞ்சப்பேராவது கூரையில் ஏறுவோம் என்ற முடிவோடுதான் தொடங்கினோம். முடிவில் எம்மோடு பலர் இணைந்துவிட்டார்கள். மட்டக்களப்பைச் சேர்ந்த பிரபா என்ற கைதி பி 6 கூரை மீது மாலை 4.30 மணியளவில்

# கோழிக் கூட்டுக்குள் குண்டைக் கண்டுபிடித்தேன்

**கமலநாதன்**

(சென்றவாரத் தொடர்ச்சி)

1987 காலப் பகுதியில் இலங்கை அரசின் காலாட் படையில் இணைந்து பயிற்சி பெற்று வடக்கின் பல பாகங்களிலும் புலனாய்வு வேலைகளில் ஈடுபட்டவர் மேஜர் ஷான். புலிகள் தாக்குதல்களை நடத்துவதற்கு முன்னரே அவற்றைக் கண்டுபிடித்து முறியடித்தார் என்றும் புலிகளின் தாக்குதல்கள் பலவற்றுக்கு எதிர்த் தாக்குதல்களைத் தொடுத்து முறியடித்தார் என்றும் அவர் தனது செவ்வியில் கூறுகிறார். இதற்கெல்லாம் தனக்கிருந்த தமிழ் பேசும் ஆற்றலே காரணமாக இருந்தது என்கிறார். இறுதிப் போர் வரை திரை மறைவிலிருந்து தகவல்களைச் சேகரித்த படைத்துறைப் புலனாய்வாளர்களில் மேஜர் ஷான் முக்கியமானவர். வெனச யூரியுப் தளத்துக்குச் செவ்வியளித்த அவர் தனது முகத்தைக் காட்டவில்லை. இப்போது செயலிழந்த நிலையில் சக்கர நாற்காலியில் காலத்தைக் கழித்து வருகிறார். அவர் வெனச யூரியுப் தளத்துக்கு வழங்கிய செவ்வியின் இரண்டு பகுதிகள் கடந்த இரு வாரங்களாக வெளியாகின. அதன் மிகுதிப் பகுதி இங்கே தரப்படுகின்றது.

வடமராட்சி - சிறுப்பிட்டிப் பகுதியில் மர்ம நபர் ஒருவரின் நடமாட்டம் இருப்பது பற்றித் தகவல் கிடைத்தது. அவர் மூலம்தான் தரைப் படையின் யாழ்ப்பாணத் தளபதி சந்திரசிறி மீதான தாக்குதலுக்கு வெடி மருந்துகள் வழங்கப்படவிருக்கின்றன என்று அறிந்தேன். இந்த நபர் தனது வீட்டில் கிழமையில் 2 அல்லது 3 நாள்கள் சென்று சாப்பிடுகிறார் என்று அறிந்தேன். வீட்டுக்கு வரும்போது அவரை மடக்கிப்பிடிப்பது என்று திட்டமிட்டபோதிலும் அந்த வீட்டுக்கு அருகில் மறைந்திருக்க வசதியான இடம் எதுவும் இருக்கவில்லை. வீட்டுக்கு அருகிலிருந்த ஒரு வாழைத் தோட்டத்தைத் தெரிவு செய்தோம். யாழ்ப்பாணத்து விவசாயிகள் வாழைச் செய்கையில் வல்லவர்கள். அவர்கள் அதற்காக இரசாயன உரங்களைப் பாவிப்பதில்லை. வாழைத் தோட்டத்தில் வெட்டப்படும் வாழைக் கழிவுகள், மாட்டெரு போன்றவற்றைக் குழியில் போட்டு வைத்திருப்பார்கள். இவ்வாறான ஒரு குழியையே நாங்கள் மறைந்திருக்கத் தெரிவு செய்தோம்.

வாழைத் தோட்டத்துக்குள் வெட்டப்பட்டிருந்த குழிக்குள் மறைந்திருந்தோம். மறைந்திருந்தபோது சாணத்தின் துர்நாற்றம், சாணத்துக்குள் இருந்த புழுக்கள் என உச்சமான துன்



பத்தை அனுபவித்தோம். நாம் எதிர்பார்த்த நாளில் அந்த நபர் வீட்டுக்கு வரவில்லை. நாம் பதுங்கியிருந்த இடத்தை விட்டு எழுந்து போய்வரவும் முடியவில்லை. அதனால் அடுத்த நாள்வரை அதே இடத்தில் பதுங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இரண்டாவது நாள் பகல் அந்த நபர் வீட்டுக்குச் செல்வதை அவதானித்தோம். அந்த நடவடிக்கையில் நானும் இன்னும் இருவரும் பங்குபற்றினோம். பகல் பொழுது என்பதால் அவரது நடமாட்டத்தைத் துல்லியமாக அவதானிக்க முடிந்தது. அந்த நபர் அங்கு வந்து தனது சேட்டைக்

தனியே ஏறினார். அவர் சும்மா விளையாட்டாக ஏறுகிறார் என்று நினைத்தேன். அந்தக் கட்டடம் 2 மாடிகளைக் கொண்டது. மேலே 3 அங்குலத் தடிப்புள்ள தூண்போன்ற அமைப்பு இருந்தது. அதைப் பிடித்துக் குரங்கு ஏறுவது போல 2ஆவது மாடி வரை அவர் ஏறியது மயிர்க் கூச்செறியும் நிகழ்வாக இருந்தது. அவ்வாறான ஒரு கட்டடத்தில் என்னால் ஒருபோதும் ஏற முடியாது. நாம் ஏறிய பகுதியான பி 2 தனிக்கட்டடமாக இருந்தது. 15 அடி உயரமிருக்கும் அதிலுள்ள யன்னல்களைப் பிடித்து ஏற்கனவே ஏறியிருந்தவர்களின் கைகளைப் பிடித்துக் கட்டடத்தின் தளத்தில் ஏறினேன். பின்னர் அதிலிருந்து பி 1 கூரைக்கு ஏறுவதற்காக 2 போர்வைகளை உருட்டிக் கயிறுபோல வைத்திருந்தார்கள். அதை மேலேயுள்ள இருவர் பிடிக்க அதைப் பிடித்து மேலே ஏறினேன். கூரையை அண்மித்தபோது சேரனும் இன்னோர் நண்பரும் என்னைத் தூக்கி எடுத்தார்கள்.

பி 6இல் ஏறிய பிரபாவை எம்முடன் வருமாறு அழைத்தோம். எல்லாக் கூரைகளிலும் இருந்தால்தான் நல்லது என்று அவர் சொன்னார். பின்னர் அவருடன் வேறு சில நண்பர்களும் ஏறினார்கள். அதில் முஸ்லிம் நண்பர் ஒருவரும் இருந்தார். எமது பகுதியிலும் முஸ்லிம் நண்பர் ஒருவர் ஏறியிருந்தார். மாலையில் வார்ட்டுகள் பூட்ட முன்னர் 25 பேர் கூரையில் இருந்தோம். இதை நாம் எதிர்பார்க்கவில்லை. இரவானதும் மழை பெய்யத் தொடங்கியது. தலையில் சொப்பிங் பயைப் போட்டுக் கொண்டு மழையில் நனைந்தோம்.

(தொடரும்)

கழற்றி வைத்துவிட்டு முகம், கை, கால் கழுவினார். அவர் உணவுண்ணத் தொடங்கும்வரை காத்திருந்து திடீரென்று அந்த வீட்டை முற்றுகையிட்டோம். அந்த நபருக்கு விடயம் தெரிந்துவிட்டது. சாப்பிட்ட கோப்பையை என்னை நோக்கி வீசி எறிந்துவிட்டுக் குசினிப் பகுதிக்குள் ஓடிக் கட்டில் ஒன்றுக்குக் கீழ் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டுள்ள ஜக்கட் ஒன்றை எடுத்துக் கொண்டு ஓட முயன்றார். நாம் மடக்கிப் பிடித்தோம். அவர் முகம் கழுவும்போது சயனைட் குப்பிகளைக் கழற்றி வைத்ததால் நாம் மடக்கிப் பிடித்தபோது அவரிடம் சயனைட் இருக்கவில்லை.

இரவு 2 மணியளவில் அந்த நபரிடம் பெற்ற தகவல்களின்படி அவரது வீட்டிலிருந்த கோழிக்கூட்டுக்கு அடியில் 10 அடி நீள, அகலம் கொண்ட ஆழமான பங்கர் அறை ஒன்று இருப்பது தெரியவந்தது. அதில் கொங்கிறீட் மூடி ஒன்று இருந்தது. அதை ஒரு கம்பியால் கொழுவித் தூக்கியபோது மோட்டார் சைக்கிள்களின் பெற்றோல் கலன்கள் 2 இருந்தன. அதில் ஒன்று ரி.வி.எஸ். மோட்டார் சைக்கிளுக்கு உரியது. மற்றையது ஹீரோ கொண்டா மோட்டார் சைக்கிளுக்கு உரியது. அதற்குள் காவல்துறையினரின் உடைகள், காலணிகள், எல்லாம் பொதி செய்யப்பட்டிருந்தன.

வன்னிப் படை நடவடிக்கைக்கு முன்னர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது புலிகளின் திட்டமாக இருந்தது. இதற்காகத் திசை திருப்பும் தாக்குதல்களை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்கள்.

எமது நடவடிக்கைகள் எப்போதும் திரைமறைவில் இருந்தன. ஜெனரல் சுரேஷ் அலி தலைமையில் பல இடங்களில் புலிகளின் ஆயுதங்களை எடுத்தோம். சிறுப்பிட்டியில் கோழிக்கூட்டுக்குள் ஆயுதங்களைக் கைப்பற்றி ஏற்படவிருந்த பேரழிவைத் தடுத்ததற்காக எனக்கு ரண விக்கிரம பதக்கம் வழங்கப்பட்டது.

**மருத்துவரின் தொலைபேசியைப் புலிகள் பாவித்தார்கள்**

எனக்குத் தமிழ் பேசத் தெரிந்ததால் புலனாய்வாளராகப் பல தகவல்களை இலகுவாகப் பெற முடிந்தது. எனது இந்தப் பணி முள்ளிவாய்க்கால்வரை இருந்தது. புலிகளின் புலனனாய்வுத் துறையைச் சேர்ந்த ரட்ணம் மாஸ்ரரின் புலனாய்வாளர்கள் இருவர் பற்றி அறிந்தேன். அவர்கள் இருவரும் சகோதரர்கள். ஒருவர் யாழ்ப்பாண மருத்துவமனையில் மருத்துவர் ஒருவரின் உதவியாளராகக் கடமையாற்றினார். அந்த மருத்துவருக்கு வழங்கப்பட்டிருந்த தொலைபேசியை மருத்துவர் அலுவலகத்தில் இல்லாத நேரங்களில் தனது புலனாய்வுத் தேவைகளுக்காகப் பயன்படுத்திக்கொண்டிருந்தார். அவரது தம்பி ஒருவர் புலிகளின் பிஸ்டல் ரீமில் இருந்தார். இவர் தனது தம்பியுடன் தகவல்களைப் பரிமாறிக்கொண்டிருந்தார். பிஸ்டல் ரீமில் இருந்தவரை நான் மடக்கிப் பிடித்தேன். அவரை வைத்துப் பல தகவல்களைப் பெற்றுக்கொண்டேன். அதன் பின்னர் கேணல் அமல் கருணாரத்னவுடன் கதைத்துச் சில விடயங்களைக் கையாண்டேன்.




**கே.பி. ஊடாக உலங்குவானூர்தி, கப்பல் பெற ஏற்பாடு**

நான் கைது செய்த நபரின் விசாரணையில் கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் மூலம் உலங்கு வானூர்தி ஒன்றை

**கடல் மார்க்கமாக இயக்கக் குடும்பங்களை இந்தியாவுக்கு அனுப்பும் திட்டம் இருக்கிறது என்று அறிந்தேன்**

அல்லது கப்பல் ஒன்றைப் பெறுவது தொடர் பாகக் கிளிநொச்சியிலிருந்து புலிகள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று அறிந்தேன். எனினும் அங்கிருந்து வெளியேறும் விடயத்தில் பிரபாகரனுக்கு உடன்பாடு இருக்கவில்லை என்றும் அறிந்தேன். தான் வெளியேறி விட்டால் புலி உறுப்பினர்களின் மன வலிமை பாதிக்கப்பட்டு விடும் என்று பிரபாகரன் நினைக்கிறார் என்றும் அறிய முடிந்தது.

கடல் மார்க்கமாக இயக்கக் குடும்பங்களை இந்தியாவுக்கு அனுப்பும் திட்டம் இருக்கிறது என்று அறிந்தேன். காலை 3 மணியளவில் தீபனின் குடும்பத்தை 3 படகுகளில் ஏற்றி மீன்பிடிப் படகுகளைப்போல பாசாங்கு செய்து படகில் இருப்பவர்களை வலையால் மூடிச் சென்றனர் என்று அறிந்தேன்.

படகில் இயக்கக் குடும்பம் ஒன்று வெளியேறிய செய்தியை தமிழ்ப் பத்திரிகை வெளியிட்டது. சென்றவர்களின் பெயரும் போடப்பட்டிருந்தது. அந்தப் பெயர்களைக் குறித்து எடுத்துக்கொண்டேன். அந்தப் பத்திரிகையை பலாலியில் இருந்த பிரிகேடியர் செனவிரத்னாவுக்கு அனுப்பி வைத்தேன். புலிகளின் 2ஆவது படகுப் பயணத்தில் சூசையின் குடும்பம் அனுப்பப்பட்டது. அதற்கிடையில் எனது ஏற்பாட்டில் கடற்படைக் கப்பல்கள் தயாராக இருந்ததால் அவர்கள் சென்ற கப்பல் கைப்பற்றப்பட்டுச் சூசையின் மனைவி பிடிபட்டார்.

அடுத்த கப்பலில் பிரபாகரனின் குடும்பம் போகவிருந்தது என்ற செய்தி கிடைத்தது. சூசையின் மனைவி பிடிபட்டதால் பிரபாகரனோ அவரது குடும்பமோ திட்டமிட்டவாறு கடலால் செல்லும் வாய்ப்பு இல்லாது செய்யப்பட்டது.

(தொடரும்)

நட்சத்திரா

# ஏன்...?

# அப்டி...?



37

# குளங்களை ஆழப்படுத்தினால் அதிக நீரைச் சேமிக்க முடியாது

தங்கள் ஊர்களிலுள்ள குளங்களை ஆழப்படுத்தித் தருமாறும் அதன் மூலம் அதிக நீரைச் சேமித்து மேலும் பல ஏக்கர்களில் விவசாயத்தைச் செய்ய முடியும் என்றும் அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் கிராமத்து மக்கள் கோரிக்கை விடுவது வழக்கம். ஆனால் குளத்தை ஆழப்படுத்தினால் அதிக நீரைச் சேமிக்க முடியுமா என்றால் அதுதான் இல்லை. ஆழப்படுத்தினால் அதிக நீரைச் சேமிக்கலாம் என்பது சாத்தியமற்றது.

மழை நீரைக் குளங்களில் தேக்குவது வழக்கமாக இருக்கின்றபோதிலும் குளத்தை விரும்பியவாறு ஆழமாக்க முடியாது. இந்த விடயம் பல விவசாயிகளுக்குத் தெரிந்திருப்பதில்லை. குளத்தில் நீரைத் தேக்கி வைப்பது அதன் அடியில் படிந்துள்ள களிமண் படையே. அந்தக் களிமண்படை மண் சட்டியின் அடிப்பாகம்போல செயற்பட்டு நீரை நிலத்துக்குள் இறங்கவிடாது பாதுகாக்கும். அடையல்களாலும், களி மற்றும் நீருக்கு அடியில் படிந்து இறுகக்கூடிய மண்படைகளாலும் ஆன அந்தப் படிவு பேணப்பட்டாலேயே குளத்து நீர் முழுவதுமாகத் தரைக்குள் அகத்துறிஞ்சப்படாது தடுக்கப்பட்டுத் தேக்கப்பட்டிருக்கும்.

குளத்தை ஆழப்படுத்துவதற்கு முன்னர் மண் பரிசோதனை செய்யப்படவேண்டும். அந்தக் குளத்தில் எத்தனை அடி தடிப்பில் களிமண் படை உள்ளது என்பதை ஆய்வு செய்து குளத்து நீரை நிலத்துக்குள் செல்ல விடாமல் பாதுகாப்பதற்கு ஏற்றளவான களிமண் படையை வைத்துக்கொண்டு மேலதிக படையை நீக்கி மண்ணை மட்டும் தூர்வார முடியும். அதன் மூலம் முன்பு இருந்ததைவிட ஓரளவு கூடுதலான நீரைத் தேக்கி வைக்க முடியும்.

குளத்தின் அடியிலுள்ள களிமண் படையை முற்றாக

நீக்கினால் அதற்கடுத்துக் கிரவல் அல்லது வேறு வகையான மண் படையாக இருந்தால் குளத்தில் சேமிக்கப்படும் நீர் மிக வேகமாக நிலத்துக்குள் இறங்கி அந்தக் குளத்தில் நீர் இல்லாது போய்விடும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் தூர் வார்ந்த பின் நீர் குறைகிறது, நீர் வேகமாக வற்றிவிடுகிறது என்று விவசாயிகள் குறைப்படுவர். சில அனுபவமில்லாத தொழில்நுட்ப அதிகாரிகள் விவசாயிகள் கூறுவதைக்கேட்டுக் குளங்களை ஆழப்படுத்துவதால் களிமண் படை முற்றாக நீக்கப்பட்டு நீர் இல்லாது போகிறது. அவ்வாறான சூழலில் குளத்தின் அடிப்பாகத்தின் களிமண்படை உருவாகுவதற்கு **3** அல்லது **4** பருவ மழையாவது தேவைப்படுகிறது. அதன் பின்னரே நீர் தேங்கும் அளவு கூடுகிறது. எனவே குளத்தை ஆழப்படுத்த முன்னர் குளத்தில் எத்தனை அடி தடிப்பில் களிமண் படை இருக்கிறது என்பதையும் அதில் எத்தனை அடி களி மண்ணை நீக்க முடியும் என்பதையும் அறிந்து கொண்டு செயற்படவேண்டும்.

---

# ஒன்றோடொன்று பொருந்திப்போனால் வெற்றிதான்!



**ஆசை**

மிகப் பிரபலமான தொலைக்காட்சித் தொடர்களுள் ஒன்று 'ஸ்க்விட் கேம்' **(2021)**. பல நூறு பேருக்கிடையே சாவு விளையாட்டுகள் நடத்தி இறுதியில் உயிர் பிழைக்கும் ஒரே ஒரு நபருக்குப் பல கோடிகள் பரிசாக வழங்கப்படும். அதில் ஒரு விளையாட்டு. உயரத்தில் கயிறு இழுக்கும் போட்டி. இரண்டு குழுக்களுக்கும் இடையே அந்தரம். தோற்கும் அணியினர் மேலிருந்து கீழே விழுந்து இறந்துபோக நேரிடும். ஒரு பக்கம் கிழவர் ஒருவர் உள்ளிட்ட நோஞ்சான் அணி. எதிர்ப் பக்கம், பலசாலிகள் அணி. ஆனால், வெல்வது நோஞ்சான் அணிதான். கிழவரின் வழிகாட்டுதலில் அனைவரும் ஒத்திசைந்து ஒருவருக்கொருவர் **100%** பொருந்திக் கொண்டு அந்தச் செயலில் ஈடுபட்டதால் அந்த வெற்றி. மூலக்கூறுகளும் அப்படி **100%** பொருந்திக்கொண்டு வெற்றி பெற்றால்? அதற்காகத்தான் இந்த ஆண்டின் நோபல்.

**2022**ஆம் ஆண்டு நோபல் பரிசு பேராசிரியர் கேரலின் ஆர். பெர்டோஸி (Carolyn R. Bertozzi), பேராசிரியர் மார்ட்டென் மெல்டால், பேராசிரியர் பேரி ஷார்ப்ளெஸ் (K. Barry Sharpless) ஆகிய மூவருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 'பூட்டல் வேதிவினை' (Click Chemistry) 'நேரடி இலக்கு உயிரி வேதிவினை' (Bioorthogonal Chemistry) ஆகிய துறைகளின் கண்டுபிடிப்புக்காக இந்தப் பரிசு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**பூட்டல் வேதிவினை - ஒரு முன்கதை**

இயற்கையில் உள்ளதைப் போல புதிய மூலக்கூறுகளை பெரும்பாலான வேதியியலர்கள் செயற்கையாக உரு

வாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் செயல்பாடு தொழில்துறை, வேளாண்துறை, மருந்தியல் என்று பல துறைகளுக்கும் உயிர் நாடி. இதில் உள்ள சிக்கல் என்ன வென்றால் இயற்கை மிகவும் இயல்பாக உருவாக்கும் இந்த மூலக்கூறு களை அறிவியலர்கள் உருவாக் கும்போது நிறைய ஆற்றல், பொருட்கள் செலவழிக்கப்படுகின்றன. இதனால் தேவையான பொருள்களுடன் தேவையற்ற துணைப்பொருள்களும், பெரும் பாலானவை கழிவுகள், உருவாகி விடுகின்றன.

**செயல், என்பதுதானே நமக்கு முக்கியம்! ஆகவே, இயற்கையான மூலக்கூறுகளை விட்டுவிட்டு புதிய மூலக்கூறுகளை உருவாக்க வேண்டும்.**

இது பொருட்செலவு மிக்கதாக மட்டுமல்லாமல் சுற்றுச்சூழலுக்கும் பெருங்கேடாக மாறிவிடுகிறது. மருந்து உற்பத்தித் துறையை எடுத்துக்கொள்வோம். ஒரு கிலோ மருந்து தயாரிக்கும்போது அதன் துணைவிளைவாக 25-லிருந்து 100 கிலோ வரை கழிவுப் பொருட்கள் உற்பத்தியாவதாகக் கூறப்படுகிறது. இதையெல்லாம் தவிர்ப்பதற்கு அமெரிக்க வேதியியலர் பேரி ஷார்ப்ளெஸ் (பிறப்பு -1941) முன்வைத்த யோசனைதான் 'பூட்டல் வேதிவினை.'

இதை இப்படி விளக்கலாம். எதற்காக வேதியியலர்கள் இயற்கையை நகலெடுத்து மூலக்கூறுக்களை உருவாக்கு கிறார்கள்? இயற்கையில் உள்ள மூலக்கூறு என்ன செய் கிறதோ அதையே தாங்கள் உருவாக்கும் மூலக்கூறையும் செய்ய வைக்கத்தானே! எது செய்கிறது என்பதைவிட என்ன செய்யப்படுகிறது, அதாவது செயல், என்பதுதானே நமக்கு முக்கியம்! ஆகவே, இயற்கையான மூலக்கூறு களை விட்டுவிட்டு புதிய மூலக்கூறுகளை உருவாக்க வேண்டும்.

இந்தப் புதிய மூலக்கூறுகள், தேவையற்ற துணைப் பொருட்களைத் தவிர்த்துவிட்டுத் தேவையான பொருட்களை மட்டுமே உருவாக்கும் வேதிவினைகளை நிகழ்த்தும். ஆகவே, இது பசுமை வழிமுறைக்கான வேதிவினை. இதைச் செய்வதற்கு ஒன்றுக்கொன்று முழுமையாகப் பொருந்தக்கூடிய மூலக்கூறுகள் வேண் டும். ஒரே செயலை யார் திறம்படவும் விரைவாகவும் செய்து முடிக்கிறார்கள் என்பதைக் கண்டறிவதற்கு பல குழுக்களுக்கும் இடையே போட்டி வைப்போம் அல்லவா! ஒருவருக்கொருவர் இணக்கமாகவும் நட்போடும் ஒத்திசைவோடும் திட்டமிடலோடும் செயல்படுபவர்கள் தான் இதில் வெற்றி பெறுவார்கள்.

முறையான திட்டமிடல் இருந்தால் உழைப்பும் நேரமும் கொஞ்சம் செலுத்தினாலே போதும் (ஸ்க்விட் கேம் பாணி). ஆக, ஒருவருக்கொருவர் நன்றாகப் பொருந்திப் போகக்கூடியவர்கள் இணைந்த அணி வெற்றி பெறுவதைப் போல ஒன்றுக்கொன்று நன்றாகப் பொருந்திப் போகும் மூலக்கூறுகளைக் கொண்டு வேதிவினைகளைத் திறம்பட செய்துமுடிக்க முடியும். இப்படி ஒரு மூலக் கூறும் இன்னொரு மூலக்கூறும் பொருந்துவதை இருக்கை வாரின் இரண்டு முனைக் கொளுவிகளை (seat-belt buckle) பூட்டுப்போடுவது போல் மாட்டுவதை எடுத்துக் காட்டாகக் கூறி ஷார்ப்ளெஸ் விளக்கினார்.

கொளுவிகளை மாட்டும்போது 'க்ளிக்' என்று ஒலி தோன்றுவதால் 'க்ளிக் கெமிஸ்ட்ரி'. முழுமையாக மாட் டப்படும் இருக்கைவார்தான் நமக்குப் பயன்தரும். அதே போல்தான் முழுமையாகப் பூட்டிக்கொள்ளும் மூலக்கூறு களும். ஆகவே, 'பூட்டல் வேதிவினை' என்று இதனைத் தமிழில் அழைக்கலாம்.

**எப்படி நடக்கிறது பூட்டல் வேதிவினை?**

வேதிவினைகள் நடப்பதற்கு ஒரு இடைத்தரகர் அல்லது ஊக்குவிக்கும் பொருள் வேண்டும். அதுதான் வினையூக்கி (catalyst). பூட்டல் வேதிவினையில் ஆல்கைன்கள் என்ற கரிமப் பொருளுக்கும் அசைடுகள் என்ற அயனி களுக்கும் இடையில் வேதிவினை நடக்கும். இவை இரண்டும் இயற்கையாக ஒன்று சேராதவை. ஆனால், தாமிரம் அயனி வினையூக்கியாக இருந்தால் இந்த வேதிவினை வெற்றிகரமாக நடக்கும்.

இந்தக் கண்டுபிடிப்பைக் குறுகிய கால இடைவெளியில் அமெரிக்காவில் ஷார்ப்ளெஸூம் டென்மார்க்கில் மார்ட்டென் மெல்டாலும் (பிறப்பு - 1954) செய்திருந்தார் கள். இது மூலக்கூறுகள் பூட்டிக்கொள்வதற்கான குறுக்கு வழி என்பதால் நேரம், பணம் போன்றவை மிச்சம். அதைவிட சுற்றுச்சூழலுக்கு உகந்த வழிமுறை. பூட்டல் வேதிவினையைப் பின்பற்றிப் பல்வேறு மூலக்கூறுகளைப் பல வேதியியலர்களும் வெற்றிகரமாகப் பொருத்தியிருந் தாலும் முதன்முறை செய்ததற்காக ஷார்ப்ளெஸூக்கும் மெல்டாலுக்கும் இந்த விருது.

**கேரலின் பெர்டோஸி எங்கே வருகிறார்?**

முன்னவர்கள் வேதியியலில் செய்ததை உயிரியலுக்கும் குறிப்பாக மருந்தியலுக்கும், விரிவுபடுத்தி வெற்றிகண் டவர் அமெரிக்க அறிவியலர் கேரலின் பெர்டோஸி (பிறப்பு - 1966). பூட்டல் வேதிவினையில் எப்படி ஒரு மூலக்கூறைத் திறம்பட இன்னொரு மூலக்கூறுடன் பொருத்தி விரயங்களைத் தவிர்க்கலாமோ அதேபோல் உடலில் குறிப்பிட்ட ஒரு பகுதியில், செல்லில் சரியான இலக்கு நோக்கி ஒரு வேதிப்பொருளையோ மருந்தையோ செலுத்தினால் என்ன என்று பெர்டோஸி முயன்றுபார்த்தது தான் 'நேரடி இலக்கு உயிரி வேதிவினை.' இதற்கு அவர் ஆங்கிலத்தில் உருவாக்கிய பதம் 'Bioorthogonal Chemistry.' இது ஒரு புதிய துறையாகவும் ஆகிவிட்டது.


(ஆர்த்தோகனல் - orthogonal என்ற சொல்லின் மூலப்பொருள் கிரேக்க மொழியில் 'செங்கோணம்' என்றாலும் நாம் பேசிக்கொண்டிருக்கும் விஷயம் தொடர்பான பொருள் என்பது 'ஒன்றை நோக்கி நேரடியாக' என்பதே. சில இதழ்கள் 'உயிரி செங்கோண வேதிவினை' என்று நேர்ப்பொருளைக் கொண்டு மொழிபெயர்த்தி ருந்தன. நாம் நடைமுறைப் பொருளை அடிப்படையாகக் கொண்டு 'நேரடி இலக்கு உயிரி வேதிவினை' என்று மொழிபெயர்க்கலாம்). தாமிரம் நச்சுப் பொருள் என்பதால் அதை வெற்றிகரமாக பெர்டோஸி தவிர்த்துவிட்டார்.

மருத்துவத்தின் பெரும் சவால்களுள் ஒன்று உடலின்

# நாடாளுமன்றத்தைத் தக்க வைக்கும் தந்திரத்தில் ரணில்

**நியூட்டன்**

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சஜித் பிரேமதாச, அனுர குமார திசாநாயக்க ஆகியோர் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தேர்தலை நடத்தவேண்டும் என்று சொல்லி வருகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக வாகன அனுமதியையும் இன்னும் சில சலுகைகளையும் வழங்குவதாக அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருக்கிறார். இது நாடாளுமன்றத்தைக் கலைக்காமல் இருப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைக்குள் போட்டு வைத்திருக்கும் உத்தியே. நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு மகிந்த தரப்போ, கூட்டமைப்போ கூறவில்லை. தற்போது நாடாளுமன்றில் இருக்கும் உறுப்பினர்கள் 225 பேரில் 50 பேர்கூட இனிவரும் தேர்தலில் வெற்றிபெறுவது சாத்தியமில்லை. தற்போதுள்ள நாடாளுமன்றத்தை மேலும் 5 வருடங்கள் வரை நீடிப்பதற்கான ஒப்பங்கோடல் அல்லது மக்கள் தீர்ப்பு (ரெபரண்டம்) ஒன்றை ரணில் முன்வைத்தால் அதை வேண்டாம் என்றோ அது ஜனநாயகத்துக்கு விரோதமானது என்றோ நாம் சம்மதிக்க மாட்டோம் என்றோ இனித் தமக்கு அரசியலே இல்லை என்றிருக்கும் நிலையில் இவர்கள் கூறப்போவதில்லை. இது விடயத்தில் ரணில் எடுக்கும் முடிவை தற்போதுள்ள உறுப்பினர்கள் தமக்குக் கிடைத்த அதிர்ஷ்டமாகவே நினைப்பார்கள். எனவே ரணிலுக்கு ஒத்துழைப்பார்கள்.



தான் ஆட்சியில் இருக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் விதத்தில் ரணில் விக்கிரமசிங்க தற்போது இருவேறு காரணங்களை முன்வைக்கிறார். நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்செய்ய உறுதியான ஆட்சி ஒன்று அவசியம் என்பது அதில் ஒன்று. புதிய முதலீட்டாளர்களையும் சுற்றுலாப் பயணிகளையும் கவர்வதற்காக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முக்கியம் என்பது மற்றையது. இவற்றுக்கு முடிவு கட்டிய பின்னரே அரசியலில் இருந்து ஒதுங்க முடியும் என்கிறார்.

**ஒப்பங்கோடலைப் பரீட்சித்த ஜே.ஆர்**

1982 மார்கழி 22ஆம் நாள் முதற் தடவையாக ஒப்பங்கோடல் அல்லது மக்கள் தீர்ப்பு என்ற தேர்தலை நடத்தி அப்போதிருந்த நாடாளுமன்றின் ஆயுட்காலத்தை மேலும் 6 ஆண்டுகளுக்கு நீடித்தார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. இத்தகைய மக்கள் தீர்ப்பு தேசிய

பிற பகுதிகளுக்கு எந்த இடையூறும் விளைவிக்காமல் குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் சிகிச்சை அளிப்பது அல்லது குறிப்பிட்ட பகுதியை மட்டும் ஆராய்ந்து பார்ப்பது. பெர்டோஸி கண்டுபிடித்த வழிமுறையால் உடலின் பிற பகுதிகளின் இயங்குமுறைக்கு எந்த இடையூறும் விளைவிக்காமல் ஒரு பகுதியை நேரடியாக ஆராய்ந்து பார்க்கலாம். உட்செலுத்தப்படும் மூலக்கூறுகள் ஒரு கட்டியை நேரடியாக அடைந்து ஒன்றுக்கொன்று அடுத்தடுத்துப் பொருந்திக்கொண்டு திறம்பட அந்தக் கட்டியின் மீது வினையாற்றும் அல்லது அதைக் கண்காணிக்கும்.

தரையில் ஒரு வட்டத்தை வரைந்துவிட்டு சற்றுத் தள்ளி நின்றுகொண்டு சில்லறைகளை எறிந்தால் பலவும் சிதறிப் போகும் சில காசுகள்தான் வட்டத்துக்குள் சரியாக விழும். நமக்குச் செலுத்தப்படும் மருந்துகள் பலவும் அப்படித்தான். ஆனால், பெர்டோஸி எறிந்த சில்லறைகள் அனைத்தும் வட்டத்துக்குள்ளே எறிந்தவை. அந்தச் சில்லறைகளை எடுத்து இன்று புற்றுநோய் ஆராய்ச்சிகளைப் பலரும் மேற்கொண்டிருக்கிறார்கள். மானுடகுலத்துக்கு பெர்டோஸி செய்த மகத்தான பங்களிப்புக்காக அவருக்கு இந்த நோபல்.

**கவனிக்க வேண்டிய இன்னொன்று**

நோபல் பரிசு பெற்றதும் பெரும்பாலான அறிவியலர்கள் அங்கேயே நின்றுவிடுவார்கள். ஆனால், தற்போது நோபல் பரிசு பெற்ற பேரி ஷார்ப்ளெஸ் அப்படியல்லர். அவர் ஏற்கெனவே, 2001 இல், வேதியியலுக்காக நோபல் பரிசு பெற்றவர். அந்த ஆண்டில்தான் 'பூட்டல் வேதியிய'லுக்கான விளக்கத்தையும் விரித்தெடுத்தார். தொடர்ச்சியான ஊக்கம், தொடர்ச்சியான செயல்பாடு போன்றவை அனைவரும் ஷார்ப்ளெஸிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை.

முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சித் திட்டங்களை உறுதிப் படுத்தவே உதவும். ரணிலைப் பொறுத்தவரை நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, அரசியல் தீர்வு ஆகிய விடயங்களைத் தேசிய முக்கியத்துவமான நிகழ்ச்சித் திட்;டமாக மாற்ற முயற்சிக்கிறார். இந்த மக்கள் தீர்ப்பில் ஆம், அல்லது இல்லை என்றே வாக்களிக்க முடியும். 1982இல் விளக்கா (ஆம்), பானையா (இல்லை) என்ற இரண்டு சின்னங்கள் வாக்கெடுப்புக்குப் பயன்படுத்தப் பட்டன.

**சுமந்திரனின் ரணிலைப்போன்ற செயல்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையிலும் அதன் தலைவர் சம்பந்தனைப் பொறுத்தவரையிலும் தமிழருக்கான அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் வரை ஓயப்போவதில்லை என்பதே நிலைப்பாடாக இருக்கிறது. தீர்வு கிடைத்த பின் ஒரு நாள்கூட நாடாளுமன்றத்தில்

**தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த முடியாது என்று அவர் கூறும் நிலையில் வெளிநாடுகளின் நிலைப்பாடும் அதற்குச் சாதகமாகவே இருக்கும்**

இருக்க விருப்பம் இல்லை என்ற சுமந்திரனின் கருத்தும் ரணிலின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒத்துப்போவதாகவே தெரிகிறது. அடுத்த தேர்தலிலும் கூட்டமைப்பு பெரியளவான பின்னடைவைச் சந்திக்கும் என்று அந்தக் கட்சியின் தற்போதைய நாடா ளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிந்திருப்பதால் ரணில் முன்னெடுக்கப்போகின்ற நாடாளுமன்றத்தை மேலும் நீடிக்கும் திட்டம் இவர்களுக்கும் அவசியப்படும் என் பதில் ஐயமில்லை.

**எதிர்க்கட்சிகளின் பலவீனம்**

சஜித்பிரேமதாச உட்பட எதிர்க்கட்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் மிகவும் பலவீனமாக இருக்கின்றன. நாடு தழுவிய ஆட்சி மாற்றம் ஒன்றுக்கான வலிமையான போராட்டங்களை நடத்த முடியாத அளவுக்கு அரசியலில் இவை பலவீனமாக இருப்பது தெரிகிறது. இதைவிட ராஜ பக்சாக்களுக்கு எதிரானவர்கள் ஒன்றிணைந்து செயற்படு வதற்கான சூழல்கூட இல்லை. முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவை நாட்டைவிட்டுக் கலைத்தது போன்ற பொதுமக்கள் போராட்டங்களும் இனிச் சாத்தி யமில்லை. ஜே.வி.பி போன்ற கட்சிகளிடம் ஆட்சி அதி காரங்கள் செல்வதைப் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் விரும்பப்போவதில்லை.

**பொது ஜன பெரமுனவின் நிலைப்பாடு**

மகிந்த குடும்பம் அரசியல் பின்னடைவைச் சந்தித்தி ருக்கும் நிலையில் மகிந்த ராஜபக்சவின் வீட்டில் நடந்த சரஸ்வதி பூசையில் இந்தியாவின் பாரதீய ஜனதாக் கட்சி யின் முக்கியஸ்தரான சுப்பிரமணியன் சுவாமி கலந்து சிறப்பித்தார். சரஸ்வதி பூசையை நடத்துவதற்கு மகிந்த குடும்பம் இந்துக் குடும்பம் அல்ல. சுப்பிரமணியன் சுவா மியின் வருகைகூட தற்போதுள்ள நாடாளுமன்றத்தை நீடிப்பதற்கு இந்தியாவின் அனுசரனையைப் பெறுவதற் கான முயற்சியாகவே பார்க்க முடிகின்றது.

சாதாரணமாக ஒரு மண்டபத்துக்குள் கூட்டம் ஒன்றை ஒற்றுமையாக நடத்த முடியாத தமிழர் தரப்பிற்குப் பெய ரளவில் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தாலே அதை வைத்து வடமாகாண சபைபோல அடிபிடியும் பட்டி மன்றமும் நடத்துவார்களே தவிர அதற்கு அப்பால் சென்று செயற்பட மாட்டார்கள் என்பது ரணில் தரப்புக்கு நன்கு புரியும் என்பதால் தீர்வுத் திட்டம் என்ற இரகசிய முனைப் புகள் சாத்தியமானது.

**இறுதிப் போர் விவகாரம்**

இறுதிப் போரில் இறந்த மக்களின் எண்ணிக்கையைத் தமிழர் தரப்பு இன்னும் உறுதிப்படுத்த முடியாதிருக்கும் நிலையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டிய தேவை சிங்கள ஆட்சியாளர்களுக்கு இல்லை. இது விடயத்தில் சிங்களவர் ஓரணியில் நிற்பர். காணாமல் ஆக்கப் பட்டவர்களை இறந்தவர்களாகக் காட்டி அதற் கான இழப்பீடு ஒன்றை வழங்குவது என்ற முடி வுக்கு அரசு வந்திருப்பது தெரிகிறது. இதற்குப் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சம்மதிக் காத வரை தமிழருக்கான அரசியல் தீர்வு கிடைக் கப்போவதில்லை என்ற கருத்தை எரிக்சொல் ஹெய்ம் போன்றோரும் ஐ.நா. சபையும் முன் வைக்க வாய்ப்புண்டு. இதையே டக்ளஸ் தேவா னந்தா, சுமந்திரன், சாணக்கியன் போன்றவர்களும் முன்வைக்க வாய்ப்புண்டு. தமிழருக்கான அரசி யல் தீர்வு ஒன்று கிடைக்கும் இந்த அரிய சந்தார்ப்பத் தைத் தவறவிடக்கூடாது என்று கூட்டமைப்பின் தலை வர் சம்பந்தன் கூட அறிக்கைவிட வாய்ப்புண்டு.


இது பற்றிக் கருத்து வெளியிடவுள்ள அனைத்துத் தமி ழ்த் தரப்புகளும் புலிகளின் போராட்டத்துக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்துகொண்டு நினைவுச் சுடர் ஏற்றுவ தற்குத் தமக்குள் சண்டை பிடிப்பவர்களாக உள்ளனர். தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் பலவீனமும் ஜனநாயகத்தை விரும்பாத தன்மையும் பொதுத் தேர்தல் இல்லாமலேயே இன்னொரு தடவை ரணில்விக்கிரமசிங்க அரச தலைவர் ஆவதற்கும் பொதுத் தேர்தலோ மக்கள் சந்திப்போ இல்லாமல் மீண்டும் நாடா ளுமன்றில் தற்போதைய உறுப்பினர்கள் அனைவரும் இருப்பதற்கும் வாய்ப்பை ஏற்படுத்தும். இந்த வாய்ப்பை இப்போதுள்ள உறுப்பினர்கள் இழக்க விரும்பமாட்டார்கள். இந்த விடயத்தை முன்வைப்பதற்கான அரசியல் காய் நகர்த்தல்களையே தற்போது ரணில்விக்கிரமசிங்க மேற் கொண்டு வருகிறார்.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த முடியாது என்று அவர் கூறும் நிலையில் வெளிநாடுகளின் நிலைப்பாடும் அதற்குச் சாதகமாகவே இருக்கும். அதை எதிர்ப்பவர்கள் பெரும் சக்தியாக மேல் எழுவதற்கான வாய்ப்புகள் அரிதாகவே காணப்படுகின்றன.

மக்கள் தீர்ப்பு அல்லது ஒப்பங்கோடல் ஒன்றை நடத்தும்போது தமிழரும் முஸ்லிம்களும் இல்லை என்று வாக்களித்தால் 20 வீதத்தையே நிரப்ப முடியும். ஆனால் அதுகூட நடக்கப்போவதில்லை. தமிழ்த் தேசியம் பேசு கின்ற கட்சிகள் அரசியல் தீர்வு ஒன்றுக்காக ஆம் என்று வாக்களிக்க வேண்டும் என்பார்கள்.

# எமையறிதல்

## 81



**ஐயங்கொண்டான் சுவாமிகள்**

மிகவும் முக்கியமான விடயம் எனக்கான தாயிருக்கவேண்டிய நானே என்னை யறியாமலும் அறியமுயலாமலும் இருப்பதுதான் பெருங்குற்றம். என்னை வளப்படுத்தவும் வலுவிழக்கச் செய்யவும் என்னால் மட்டுமே முடியும். பிறனொரு வனாலோ பிற ஒன்றாலோ அல்ல. எனது இயலா மைக்குக் காரணத்தை அறிந்துகொண்டால் ஏமாற் றப்பட்டேன் என்கிற ஒற்றைச் சொல் எழவாய்ப்பே இல்லை. என்னையறிதல் எவ்வாறு நிகழ்த்தப்படலாம்?

எனக்குள்ளேயே எல்லாமிருக்க நானே எல்லாமு மாயிருக்க எனக்கு வெளியே தேடி எதுதான் கிடைக் கும்? இருக்குமிடத்திலிருந்துதானே எதுவாயினும் கிடைக்கும். இல்லாத வெறுவெளியில் தேடி ஏமாற்றம், தோல்வியெண்ணம் என நீளும் ஒழுங்கில் இறுதியான தெனக் கருதக்கூடிய ஒரு புள்ளியில் விரக்தி ஆகிய வையே விளைவாகக் கிடைக்கிறது. இது நான் பெரிதும் எதிர்பார்த்த விளைவு கிடைக்கவில்லை என்பதாக என் னைத் துவளவிட்டுவிடுகிறது. நான் எனக்குள்ளாகச் சிதைந்து என்னைக் குற்றுயிராக்கி விடுகிறேன் என்ப தற்கப்பால் எதுவும் இல்லை.

இங்கே எதிர்பார்த்த என்கிற பதமானது முக்கியத்துவம் மிக்கதொன்று. இப்பதம் பற்றி ஏற்கனவே பேசியிருக் கிறோம். ஆனாலும் மேலும் சில விடயங்களை நினை வில் கொண்டால் நன்று. எதிர்பார்ப்பு என்பதானது எனது உள்ள மற்றும் உடல் தகைமைகளில் முற்றும் தங்கியி ருக்கும் ஒரு மனம்சார் விடயம் என்பது முக்கியமானது. அது தொட்டுணர இயலுமான ஒரு பண்டமல்ல. அது கூடாததுமல்ல. அப்படியொன்று இல்லாத ஒரு வாழ்க் கையென்பது அர்த்தமற்றது. மட்டுமல்லாது பெரும் போலியானது. முதலில் கூறியவாறு அது என்னிலேயே அதிகமதிகம் சார்ந்திருப்பது.

எதிர்பார்ப்பு என்கிற ஒன்று இல்லை என்பதானது ஆசை இல்லை என்கிற ஒன்றோடு பெரிதும் ஒத்துப் போவது. எதிர்பார்ப்பென்பதே ஒரு ஆசைதான். ஆசை யென்பதே எதிர்பார்ப்பிலிருந்து எழுவதுதான். இரண் டுமே எமது முன்கற்பிதங்களற்ற யதார்த்தமான சுய விசாரணைகளின் மீதாகக் கட்டமைக்கப்படவேண்டி யவை. அவை எம்மைப் பற்றி நாம் அறிந்திருப்பவற்றை மதித்து மேலெழுந்து கொள்ளவேண்டியவை. நாங்கள் அதற்கான முயற்சியை எடுப்பதில்லை அல்லது தவ றான முயற்சியை எடுக்கிறோம் என்பதே யதார்த்தமானது.

இப்படியான களச்சூழல் எதிர்பார்பை சரியான நிலை யெடுக்க அனுமதிப்பதில்லை. எனக்குள்ளாக எழுகிற எதிர்பார்ப்பை எட்ட நானே உழைக்க வேண்டியுள்ளது. என்னையறிந்து கொண்டிக்கும் நானே உழைக்க வேண் டும் என்பதனது யதார்த்தத்தை உணர்துகொள்ளத் தவறி விடுகிறோம். அதனால் எதிர்பார்த்ததையோ எதிர் பார்த் தவற்றையோ அடைய முடியாது ஏங்குவதே வழக்க மானதாகி துன்பமாகிவிட்டிருக்கிறது. ஏக்கமே பெறுதி யாகிவிடுகிறது.

ஏக்கத்தையே பெறுதியாக்கியது நாமேயன்றி வேறி ல்லை. எமக்குள்ளான எதிர்பார்ப்பை எமக்குள்ளான இயலுமைகளோ இயலாமைகளே அவை குறித்த மதிப் பீட்டுத் தவறுகளோ புறந்தள்ளி விடுகிற அபத்தம் எம் மையறியாமலேயே கணந்தோறும் நடந்துகொண்டிருக்கி றது. இதுதான் யதார்தமாக இருக்க எம்மையறிந்து தீர்வுகாண முற்படாது (எமக்கு வெளியே) யாராலோ எப்போதோ கற்பிதஞ்செய்யப்பட மாயங்களை கண் களை இறுக மூடியபடி தலையிற் சுமந்தபடி அலைகி றோம்.

எதனையும் கேள்விக்குட்படுத்துவதை தவிர்த்து விடுகிறோம். நான் கேள்விக்குட்படுத்த வேண்டிய விட யங்களின் பட்டியலில் முதலில் என்னையே கேள்விக்குட் படுத்தத் தயாராக எத்தனை பேர் இருக்கிறோம்? என் பதுகூட ஏமாற்றம் தரும் பதிலையே அனேகமாக்


கொண்டிருக்கும். அப்படி இருக்குமாயினும் முன்பொரு பொழுது பேசிக் கொண்டதைப் போல முன்கற்பிதங்கள் வழிதான் கேள்விகளைக் கேட்க முற்படுகிற அபத்தமும் நடந்தேறுகிறது. இதைத் தவிர்த்து கேள்விகள் கேட்கப்பட வேண்டியது அவசியமானது.

முன்கற்பிதங்கள் வழி கேள்விகளைக் கேட்கும்போது நாம் எம்மைத் திருப்திப்படுத்தும் விதமான பதில்களை எதிர்பாரக்கிறோம் என்பதிலும் ஒரு எதிர்பார்ப்பு அல்லது ஆசைதான் முன்னிலையில் நிற்கிறது. பதில்களை (முன்)தீர்மானம் செய்து கேட்கப்படுவது ஆரோக்கியமானதா? அது எண்ணங்களை விரித்துச் செல்லும் வலுவோடிருக்குமா? இல்லையென்பதே தவிர்க்கவியலாப் பதிலாக இருக்கிறது.

எண்ணம் செயல் போன்றன விரிந்து செல்வதற்கான எதிரியாக எதிர்பார்ப்பு அமைந்து விடும் அபாயமானது எம்மையும் மீறியதாக அமைந்து விடுகிறது. விதிவிலக்காக அமைந்த கேள்விகளே அறிவியலாக அமைந்திருக்கின்றன என்கிற யதார்த்தம் உணரப்படல் அவசியமானது. தீ என்பது மனிதனது முதற்கண்டுபிடிப்பாகக் கொள்ளப்படுகிறது. நாம் இப்போதும் அதனை அக்கினி பகவானாக வணங்கிக்கொண்டிருக்கிறோம். சிந்திப்போமா?

---

# சுயபுத்தியெண்டொண்டு கிடக்குதோ?



கதிரேசன் காத்தவராயன்

வாசிசாலைப் பக்கம் போனன். அங்கை சங்கரியரும் முருகேசரும் ஒரு பேப்பரை ஏதோ சோதினைக்குப் போலை படிச்சுக்கொண்டிருந்தினம். 'படிக்கிற வயதிலை உப்பிடிப் படிச்சிருந்தா எப்பிடி இருந்திருப்பியள்?' எண்டுகொண்டு இருந்திட்டன். பேப்பரை என்னட்டைத் தள்ளிச்சினம் முன்பக்கத்தைச் சுட்டிக்காட்டினபடி.

'ம்ம்.. ங்ம்.. சங்கிலியறுப்பு, போதைக்குளிசை கைப்பற்றல், போதை... என்னப்பா வேறையொண்டும் நாட்டிலை நடக்கேல்லையோ?' எண்டன். முருகேசர் சிரிச்சுக்கொண்டு 'நடக்கிறதைத்தானே போட்டிருக்குது?' எண்டார். 'அண்ணை நடக்கிறதுகளை போடுறதுதானே பேப்பர்க்கறன்ரை வேலை.. வேறை எதைத்தான் அவங்களும் போடுகிறது?' எண்டார் சங்கரியர்.

'உதுகளைப் போடப் போடவல்லே கூடுகிற மாதிரிக் கிடக்குது?' எண்டன் நான். 'முந்தி வாள் வெட்டு இப்ப உது... காலத்தோடை மாற்றம்...' எண்டு நிப்பாட்டினார் முருகேசர். 'ஏனப்பா இடையிலை பெற்றோலுக்குக் காசில்லை டீசலுக்கு கட்ட டொலரில்லை எண்டல்லே எரிபொருள் வரிசைச் செய்தியளாக் கொட்டினாங்கள்...' எண்டார் சங்கரியர். 'கொரோனாச் செய்தி... வானிலை அறிவிப்பு மாதிரி வந்ததில்லே?' எண்டதுக்குச் சிரிச்சுக் கொண்டிருக்க வல்லியம்மானும் தம்பரும் வந்து இருந்துகொண்டினம்.

'என்னம்மான் என்னவாம்?' எண்டு நான் கேட்டதுக்கு 'ஒண்டைக் கண்டால் மற்றதுகளை மறக்கிறதும் புதிசாய்க் கண்டதைப்பத்தி கண்டதையும் கதைக்கிறதுதானே எங்கடை வேலை?' எண்டு சாதாரணமாச் சொல்லி எட்டித் துப்பினார். பிறகு அவரே 'குரங்கை நினைக்காமை மருந்து குடிக்கிற விசயந்தானடாப்பா எல்லாம்... மறவடா மறவடா எண்டால் மறபடுமோ?' எண்டு எரிச்சலோடை சொல்லி நிப்பாட்ட 'எதையம்மான்?' எண்டார் தம்பர்.

'எடேய் தம்பா... எதெண்டு கிடக்கே எல்லாந்தான்...' எண்டார் வல்லியம்மான். 'சரியாச் சொன்னியள் அம்மான்' எண்டார் சங்கரியர். 'இஞ்சார் ஒண்டு சொல்லட்டே... உது ஒரு நாட்டின்ரை கட்டமைப்போடை இருந்த இயக்கத்தை அழிச்சதாய்ப் பெருமைப்படுகிறவையாலை அழிக்கேலாமலுக்கல்லே கிடக்குது? உதைக் கேக்கிறதுக்கு வக்கில்லததுகளையல்லே தலையிலை காவித்திரியிறம்.. ----(தணிக்கைச் சொல்)' எண்டு வல்லியர் நிப்பாட்டினார்.

'இஞ்சார் கறுப்புச் சட்டைக்காறர் உப்பிடியான கேசுகளுக்கு போகமாட்டம் எண்டு ஒரு முடிவைக்கூட எடுக்கேலாமலுக்கல்லே திரியினம்... அவை கூட்டாய் கடுமையான தண்டனைக்காய் வாதிடலாமல்லே? ஒண்டுமில்லை நாங்கள் மூலந்தள்ளக் கத்தி ஏதாலும் நடக்குமோ?' எண்டு எல்லாரையும் பாத்தார் முருகேசர். ஏதோ என்னவோ அறிஞ்சிருக்கிறாரோ எண்டு கேக்கலாந்தான் அதுகும் சிக்கலாய்ப்போகும் எண்டு கஸ்ரப்பட்டு இருந்திட்டன்.

'ஆனால் இப்ப உதுகும் கனபேருக்கு சோறு போடுதில்லே? விழிப்புணர்வு அது இதுவெண்டுமல்லே ஒரு பக்கத்தாலை சூடு கிளம்புகுது... இல்லையோ?' எண்டார் சங்கரியர். 'இவை அடியெடுத்துக் குடுக்க வியாபாரியள் சத்தமில்லாமல் தங்கடை வியாபாரத்தைப் பெருக்குகிறாங்களாம் எண்டுமல்லே ஒரு கதை காதிலை விழுந்துது?'எண்டு தம்பர் சொல்ல 'காதிலையில்லை மூஞ்சையிலை விழும் பாத்துக்கொண்டிரு' எண்டு கொண்டு வல்லியம்மான் எழும்பிப் போட்டார்.

'என்னப்பா முருகேசு பேசாமலுக்கு இருக்கிறீர்?'

# வட்டலப்பம்

சமையல் சமையல்



நம்மவர்கள் பெரும்பாலும் வட்டலப்பம் செய்யும் வழக்கம் கொண்டவர்களில்லை. சகோதார இனத்தவர்களான முஸ்லிம்கள் இதில் கைதேர்ந்தவர்கள். விருந்தோம்பல்கள், பண்டிகைகள், நோன்புப் பெருநாள்கள் என அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அவர்களின் உணவு மேசையில் வட்டலப்பத்துக்கு என்று தனியான இடம் எப்போதுமே இருக்கும். எவ்வளவு காரசாரமான உணவை உண்டாலும் இறுதியாக வட்டலப்பத்தை உண்ணும்போது கிடைக்கின்ற சுவை தனியானது. அத்தகைய வட்டலப்பத்தை எவ்வாறு செய்வது என்று இந்த வாரம் பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

முட்டைகள்- 10, கருப்பட்டி 500 கிராம், தேங்காய்ப்பால் - ஒரு தேங்காயிலிருந்து பெற்ற முதல் பால் ஒரு டம்ளர், கஜூ - 15, நெய் - ஒரு தேக்கரண்டி, ஏலக்காய்த் தூள் - சிறியளவில்,

**எப்படிச் செய்வது?**

முதலில் முட்டைகளை நன்கு அடித்துக் கொள்ளுங்கள். கருப்பட்டியைத் தூளாக்கி வைத்திருங்கள். தேங்காயைத் துருவிப் பிழிந்து பாலை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இப்போது பாத்திரம் ஒன்றை எடுத்து அதற்குள் முட்டை, கருப்பட்டி, தேங்காய்ப் பால், ஏலக்காய்த் தூள் ஆகிய வற்றைச் சேர்த்து நன்கு கலக்குங்கள்.

நீங்கள் சமையலுக்குப் பயன்படுத்தும் குக்கருக்குள் வைக்கக்கூடிய வாறான பாத்திரம் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் நெய் தடவிக் கலவையை ஊற்றுங்கள். பின்னர் குக்கரில் 300 மில்லி லீற்றர் அளவில் தண்ணீர் விட்டு அதைச் சூடாக்கி விட்டுக் கலவை உள்ள பாத்திரத்தை மூடாமல் குக்கரை மூடி வேக விடுங்கள். குக்கர் விசில் எழுப்பிய பின்னர் 30 நிமிடம்வரை அடுப்பில் வேக வையுங்கள். 30 நிமிடம் கழித்து அடுப்பை அனைத்து ஆவி அடங்கிய பின்னர் திறவுங்கள். கஜீத் துண்டுகளைத் தூவிப் பரிமாறுங்கள்.

எண்டு சங்கரியர் கேட்டார். அதுக்கு முருகேசர் 'உதுகளைக் கதைக்கிறதே பிழையான விசயம்... சரியான திட்டத்தோடை நடத்துறதிலை எங்கடையாக்களின்ரை பங்குகளும் நிறைய இருக்குது... கதைக்கப்போனா பிரச்சனை... சட்டங்கள் கனக்க அவங்களுக்காயே வந்திருக்கல்லே? வாயைச் சாப்பிடகிறதுக்கு மட்டும் திறக்கலாம்' எண்டார். 'ஏனண்ணை கொட்டாவி விடவும் திறக்கலாமல்லே?' எண்டார் தம்பர். 'அதோ... விலைவாசியாலை பட்டினி... பசிக்கொட்டாவி எண்டதைவிட நாட்டின்ரை வங்குரோத்தை பகிடி பண்ணுறாயெண்டு பிடிச்சுப் போட்டிடுவங்கள்.. கவனம்..' எண்டு முருகேசர் தம்பரை வெருட்டுகிறமாதிரிச் சொன்னார். தம்பர் பாவம் பயந்திட்டது. 'இதுகளைக் கதைக்கிறது பயம்... அதுகளைக் கதைக்கிறது பிரயோசனமில்லை ஆனால் பொழுது போகுதல்லே?' எண்டுகொண்டு எழும்பினன். 'கதிரேசண்ணை பயந்திட்டார் போலை?' எண்ட சங்கரியருக்கு 'இஞ்சார் சங்கரி பயமில்லை தற்காப்பு... இதுவும் ஒரு ராசதந்திரம்தான்' எண்டு நான் சொல்ல சிரிச்சினம். நான் வீட்டை வந்திட்டன்.



# காட்ஃபாதர்

## பார்க்கக்கூடிய அரசியல் நாடகம்



அதிகாரத்தை கைப்பற்ற நடக்கும் அரசியல் சதுரங்க ஆட்டத்தில் இறுதியில் என்ன நடக்கிறது என்பது தான் 'காட்ஃபாதர்'. ஆந்திர முதல்வராக இருக்கும் பிகேஆரின் (சர்வ தாமன் டி. பானர்ஜி) திடீர் இறப்பு கட்சியையும், குடும்பத்தையும் உலுக்கி விடுகிறது. அவரது மறைவுக்குப் பிறகு அடுத்த முதல்வர் யார் என்ற கேள்வி எழ, போட்டிகள் பலமடைகின்றன. இதில் அரசியல் வாரிசுகளும், குடும்ப வாரிசுகளும் முந்திக்கொண்டு முட்டிக்கொள்கின்றனர்.

விறுவிறுப்பான இந்த அரசியல் சதுரங்க ஆட்டத்தில் களத்துக்கு வெளியே நின்று காட்சிகளையும், ஆட்சியையும் மாற்ற காய் நகர்த்துகிறார் பிரம்மா (சிரஞ்சீவி). இறுதியில் பிரம்மா தான் நினைத்ததை சாதித்தாரா, ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தது யார் என்பதை சொல்லும் அரசியல் த்ரில்லர் பாணியில் சொல்லியிருக்கும் படம் தான் 'காட்ஃபாதர்'. ஐப்பசி 5ஆம் திகதி படம் வெளியானாலும், தமிழில் 14 ஆம் திகதிதான் படம் வெளியிடப்பட்டுள்ளது.

மலையாளத்தில் பிருத்விராஜ் இயக்கத்தில் மோகன்லால் நடிப்பில் வெளியான 'லூசிஃபர்' படத்தின் ரீமேக் தான் இந்த 'காட்ஃபாதர்' என கூறப்பட்டாலும், படத்தின் இயக்குநர் மோகன்ராஜா கதைக்கருவை எடுத்துக்கொண்டு திரைக்கதையில் பல் வேறு மாற்றங்களை நிகழ்த்தியிருக்கிறார். தெலுங்கு பொழுதுபோக்கு சினிமா பார்வையாளர்களுக்கான அந்த மாற்றங்கள் கைகூடியிருக்கின்றன.

படத்தின் முதல் பாதி கதாபாத்திரங்களாலும், அவர்களின் இரட்டை வேட குணநலன்களாலும் சூடுபிடிக்கிறது. உள்துறை அமைச்சரான வர்மா (முரளி சர்மா), பிகேஆரின் மருமகன் ஜெய் தேவ் (சத்யதேவ் காஞ்சரானா) கதாபாத்திர வடிவமைப்பு, திரைக்கதையின் சுவாரஸ்ய ஓட்டத்திற்கு பலம் சேர்க்கின்றன. இருப்பினும் சில இடங்களில் வில்லனாக ஜெய் தேவ் கதாபாத்திரத்தின் அழுத்தம் குறைவாக இருப்பதையும் உணர முடிகிறது.

தன்னைச் சுற்றி பூகம்பமே வெடித்தாலும், அசால்ட்டான தனது உடல் மொழியில், குறைவான வசனங்களுடன், முக பாவனைகளாலும், உணர்ச்சிகளாலுமே எல்லாவற்றிற்கும் பதிலளிக்கிறார் சிரஞ்சீவி. மாஸ் என்டர்டெயினருக்கான தீனியை ரசிகர்களுக்கு தேவைக்கு அதிகமான அளவில் கொடுத்து தனது கரீஷ்மாவால் ஈர்க்கிறார். தனது தங்கையிடம் 'அம்மா' என சொல்லும் காட்சிகளில் உருக வைக்கிறார். சிரஞ்சீவி ரசிகர்களுக்கு இப்படம் பக்காவான அரசியல் விருந்துதான்!




கண்ணியமான தோற்றத்தில், அலட்டிக்கொள்ளாத நடிப்பில், கண்களாலேயே மிரட்டும் காட்சிகள் என நயன்தாராவின் கதாபாத்திர பொருத்தம் கச்சிதம். சல்மான் கதாபாத்திரம் இந்தி ரசிகர்களுக்காகவே திணிக்கப்பட்ட உணர்வைக்கொடுக்கிறது. அந்தக் கதாபாத்திரம் இல்லாவிட்டாலும் பெரிய பாதிப்பு திரைக்கதையில் ஏற்பட்டிருக்காது. அவர் வரும் காட்சிகளில் கணினி வரைகலை படுமோசம். இவர்களைத் தவிர்த்து சமுத்திரக்கனி, முரளி சர்மா, தான்யா ரவிச் சந்தர், சுனில் ஆகியோர் திரைக் கதையின் பசிக்கு ஏற்ற நடிப்பை வெளிப்படுத்துகின்றனர்.

பொறுமையாக நகரும் படத்தில் ஆங்காங்கே சில சுவாரஸ்யமான காட்சிகளை சேர்த்து ரசிக்க வைக் கிறார் மோகன்ராஜா. சிரஞ்சீவிக்கு கட்சி முதல் காவல்துறை வரை சென்ற இடமெல்லாம் மக்கள் செல்வாக்கு பெருகி வழிகிறது. ஆனால், அவர் இந்த மக்களுக்கு என்ன செய்தார், கண்ணசைவில் காவல்துறை அவருக்கு அடிபணிய காரணமென்ன என அதற்கான பின்புலங்கள் ஆராயப்படாமல் மேலோட்டமாகச் சொல்லப்பட் டிருப்பது திருப்தியாக இல்லை, காட்சிகளுக்கு அழுத்தம் சேர்க்கவில்லை. அதேபோல சத்தமேயில்லாமல் வன்முறை செய்யும் சிரஞ்சீவி அடுத்து என்ன செய்யபோகிறார் என்ற ஆர்வத்தை தூண்டியிருப்பது, அதற்கேற்ற சில திடுக் காட்சிகளும் ஈர்ப்பு. பாடல்கள் தேவை யில்லாத திணிப்பு. போலவே சண்டைக் காட்சிகளும்!

சிரஞ்சீவிக்கு தனது இசையால் முடிந்த அளவிற்கு மயிர்க்கூச்செறியும் தருணங்களை உருவாக்க மெனக்கெட்டிருக்கிறார் தமன். அவை சில இடங்களில் நன்றாகக் கைகொடுத்திருக்கிறது. நீரவ் ஷா ஒளிப்பதிவில் சண்டைக்காட்சிகளும், சிரஞ்சீவி, சல்மானுக்கான ஃப்ரேம்களும் ரசிகர்களுக்கான கண்கவர் விருந்து. சிரஞ்சீவிக்கு பெரிதாகக் கஷ்டம் கொடுக்காமல் உரு வாக்கப்பட்டுள்ள சண்டைக் காட்சிகளும், பிரபுதேவாவின் நடன அமைப்புகளும் கவனம் பெறுகின்றன.

16

# வாரம் ஒரு சொல்....!

## ஈடாட்டம்

ஈடாட்டம் என்பது யாழ்ப்பாணக் கிராமங்களில் பாவிக்கப்பட்டு வரும் சொல்லாகும். தற்போது பெரும்பாலும் அருகி வருகிறது. இது பெயர்ச் சொல்லாகப் பயன்படுகிறது. முற்காலத்தில் உறுதியாக இருந்தவை பின்னர் பழுதாகி அல்லது பழையதாகி அவற்றின் உறுதிப்பாட்டை இழந்து வரும்போது அதைக் குறிக்கும் விதத்தில் இந்தச் சொல் பயன்படுத்தப் படுகிறது.

''இப்ப முந்திய மாதிரி சைக்கிள் ஓட முடியாது. உடம்பு நல்லா ஈடாடிப் போச்சுது''

''அவன் செத்த பிறகு அந்தக் குடும்பம் நல்லாய் ஈடாடிப்போச்சு''

''அந்தக் கொட்டிலை அப்படியே மேய ஏலாது. மரங்கள் பழுதாகி ஈடாடிப்போச்சு. மரந்தடிய மாத்தித்தான் மேயவேணும்''

''அந்தப் பள்ளிக்கூடம் முந்திய மாதிரி இல்லை. பிள்ளையளும் குறைவு நல்ல வாத்திமாரும் இல்லை. இப்ப எல்லாம் ஈடாடிப்போச்சுது''

''அந்தக் கட்சி உறுப்பினர்களுக்கிடையில கனக்கப் பிரச்சினையால் கட்சி நல்லாய் ஈடாடிப்போச்சு''

''இலங்கையின் பொருளாதாரரம் நல்லா ஈடாட்டம் கண்டிட்டுது இப்போதைக்கு சீர் செய்ய ஏலாது''

''அந்தத் தேரின் சில்லுகளை மாற்றிப் புதிதாகச் சில திருத்தங்கள் செய்யவேணும். போனமுறை தேரிழுக்கேக்குள்ள நல்லா ஈடாட்டம் கண்டிட்டுது''

இவ்வாறாக ஈடாட்டம் என்ற சொல் உறுதிப்பாட்டை இழந்து விட்டது என்ற அர்த்தத்தில் பாவிக்கப்படுகிறது.

## உர...

பெரும்போகத்திற்காக உரத்தை இறக்குமதி செய்வதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 40 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி வழங்கப்பட்டுள்ளது.உரத்தின் விலை உலக சந்தையில் அதிகரித்துக் காணப் படுவதால் , விவசாயிகளுக்கு அதற்கான நிவாரணங்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

# உலகின் தரமான கல்வி!

**வியஜ் அசோகன்**

உலகில் மக்கள்நல அரசுகளுக்கான முன்னுதாரணமாகப் பார்க்கப்படுபவை நோர்டிக் நாடுகள். நோர்டிக் என்றால் வடக்கு. ஐரோப்பாவின், அட்லாண்டிக்கின் வடக்கு பிராந்தியத்தில் உள்ள நாடுகளைக் குறிக்கும். டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகளையும் மேலும் சில தன்னாட்சிப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய பிராந்தியம் இது.

இந்த நாடுகள் சமூகச் சூழலில் ஒரு பொதுவான பண்பாட்டை உருவாக்கியிருக்கின்றன. பொதுக் கல்வி, பொது சுகாதாரத்துக்கு முன்னுரிமை உயரிய தனிநபர் சுதந்திரம், மதிப்புக்குரிய சமூக நல்லிணக்கம் என்று மேம்பட்ட ஜனநாயகத்துக்கான முன்னுதாரணமாக உலக நாடுகளால் பார்க்கப்படும் நாடுகள் இவை.

இங்குள்ள கல்விச் சூழல் மிக உயர்வானது. பல நாடுகளின் ஆட்சியாளர்கள் தங்களுடைய சமூகத்தில் உண்டாக்க வேண்டிய மாற்றங்களுக்காக இங்குள்ள கல்வி நிலையங்களைப் பார்வையிட்டுச் செல்வார்கள். இத்தகைய சிறப்புமிக்க கல்விச் சூழலை அறிமுகப்படுத்தும் விதமாகவே இந்தத் தொடரை வெளியாகிறது. கட்டுரையாளர் விஜய் அசோகன் இந்தப் பிராந்தியத்தில் வசிப்பவர் என்பதோடு, இந்த நாடுகளில் பணியாற்றுபவரும்கூட.

பின்லாந்து நாடு, உலகின் தலைசிறந்த பள்ளிக் கல்வியை வழங்குகிறது என்பது தமிழ்ச் சூழலில் நாம் அடிக்கடிக் கேட்டுப் பழகிய செய்திதான். ஆனால், எப்படி பின்லாந்து நாட்டினரால் உலகின் தலைசிறந்த கல்வியை வழங்க முடிகிறது? பின்லாந்து போலவே ஸ்வீடன், டென்மார்க், நோர்வே, ஐஸ்லாந்து நாடுகளின் பள்ளிக் கல்வித் துறைச் செயற்பாடுகள் பல நாடுகளுக்கும் முன்மாதிரியாக திகழக் காரணங்கள் என்ன? இதுபற்றி நாம் ஆழமாக விவாதித்தது இல்லை அல்லவா? இனி விவாதிப்போம்!

நோர்ட்டிக் நாடுகள் அருகருகே இருப்பதால் மட்டுமல்ல, இவர்களுக்குள் ஒரு வரலாற்றுப் பிணைப்பும் உள்ளது. மொழிகளாலும், சமூக அமைப்புகளின் உருவாக்கத்தினாலும் மேலும் பல வரலாற்றுக் காரணங்களாலும் ஒன்றானவர்கள் இவர்கள்.

இன்றைய நோர்வேயின் நிலப்பரப்பானது, டென்மார்க் நாட்டின் கட்டுப்பாட்டில் 400 வருடங்களுக்கு மேலாகவும், ஸ்வீடனின் கட்டுப்பாட்டில் 100 ஆண்டுகளாகவும் இருந்தது. அதேபோல, பின்லாந்து 600 ஆண்டுகளுக்கும் மேலாக சுவீடனின் கட்டுப்பாட்டிலும், 100 ஆண்டுகள் ரஷ்ய நாட்டின் கட்டுப்பாட்டிலும் இருந்தது. ஆயினும்கூட நோர்வே, பின்லாந்து இரண்டும் தனித்த ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கு முன்பிருந்தே கல்வி, தாய்மொழி, சமூகக் கட்டமைப்பு, அரசியல் அதிகாரக் கட்டமைப்பு என முக்கியமான சிலவற்றில் தத்தமது தனித்தன்மையினை நிலைநாட்டுவதில் 'விடாப்பிடியான' உறுதியுடன் இருந்தன.

**நோர்டிக் நாடுகள்**

ஸ்வீடன், நோர்வே, டென்மார்க் மூன்றும் இணைந்த பகுதிகளை 'ஸ்காண்டிநேவியன் நிலம்' என்றும் வகைப்படுத்துகின்றனர். இந்தோ -ஐரோப்பியக் கூட்டில் இருந்துவந்த ஜெர்மானிய மொழிப் பிரிவின் கிளை மொழிகள் 'ஸ்காண்டிநேவியன்

> “ உலகின் தலைசிறந்த கல்வியைக் கொடுக்கும் நாடுகளின் முதன்மைப் பட்டியலில் மட்டுமல்ல, ஆண்-பெண் பாலினச் சமத்துவம் உள்ளிட்ட பல சமூக மேம்பாட்டு அளவுகோல்களிலும் முதன்மையான இடத்தில் இருப்பதால், உலகின் மகிழ்வான நாடுகளில் இந்த நாடுகள் முன் வரிசையில் இருக்கும் ”



மொழிகள்' (ஸ்வீடிஷ், டேனீஷ், நோர்வேஜியன்) ஆகும். 1950களுக்குப் பின்னர், ஸ்காண்டினேவியன் கூட்டில், ஐஸ்லாந்தும் பின்லாந்தும் இணைந்த பின், நோர்டிக் நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

நோர்டிக் நாடுகள் மொழிகளிலும் வரலாற்றிலும் பிணைந்திருப்பதுபோல, கல்வித் துறை வளர்ச்சியிலும் பல காரணங்களால் ஒருங்கிணைந்தனவே! கல்வியுரிமை, தாய்மொழிக் கல்வி, சமத்துவக் கல்வி ஆகியவற்றையும் மனித உரிமையின் அடிப்படையாக வகுத்துவைத்திருக்கின்றன இந்த நாடுகள்.

**உலகின் முன்னணிப் பட்டியலில் நோர்டிக் நாடுகள்**

உலகின் தலைசிறந்த கல்வியைக் கொடுக்கும் நாடுகளின் முதன்மைப் பட்டியலில் மட்டுமல்ல, ஆண்- பெண் பாலினச் சமத்துவம் உள்ளிட்ட பல சமூக மேம்பாட்டு அளவுகோல்களிலும் முதன்மையான இடத்தில் இருப்பதால், உலகின் மகிழ்வான நாடுகளில் இந்த நாடுகள் முன்வரிசையில் இருக்கும். 2022இல் உலகின் மகிழ்ச்சிகரமான நாடுகளின் பட்டியலில், பின்லாந்து முதல் இடம். டென்மார்க் இரண்டாம் இடம். ஐஸ்லாந்து மூன்றாம் இடம். ஸ்வீடன் ஏழாம் இடம். நோர்வே எட்டாம் இடம்.

உலகின் பாதுகாப்பான நாடுகளின் வரிசையிலும் இந்த நாடுகள் முதன்மையில் இருக்கும். உலகின் சமூக நலத் திட்டங்களுக்கான மேற்கோள்கள் இந்த நோர்டிக் நாடுகளிடம் இருந்தே பெறப்படுகின்றன.

**நோர்டிக் சமூக உருவாக்கமும் கல்வித் துறையும்**

கல்வித் துறையை மனித உரிமை அடிப்படையில் வரிசைப்படுத்திய நாடு என்பதால், தாய்மொழிக் கற்றலைத் தங்கள் நாட்டில் வாழும் எல்லா நாட்டினருக்கும் எல்லா இனத்தினருக்கும் மனித உரிமை அடிப்படையிலான 'மொழியியல் மனித உரிமை' (Linguistic Human Rights) என இந்நாடுகள் வகைப்படுத்தியுள்ளன.

அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் சமத்துவக் கல்வி, அனைவருக்கும் சம வாய்ப்புள்ள கல்வி எனும் கொள்கையை இவை கொண்டுள்ளன.

அனைவரையும் உள்ளடக்குதல், சமூக நீதி இந்த இரண்டிலும் பயிற்சி ஒரு ஆசிரியருக்கு அவர் ஆசிரியர் பயிற்சியில் பங்கேற்கும்போதே அளிக்கப்பட்டுவிடுகின்றன. நோர்டிக் நாடுகளின் கல்வித் துறை வெற்றியில் மிக முக்கியப் பங்காற்றும் இரண்டு காரணிகள் 1) தொடக்கக் கல்வியும் 2) ஆசிரியர் பயிற்சிக் கல்வியும்.

**அரசியலும் பாலின சமத்துவக் கல்வியும்**

நாம் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அடுத்த செய்தி, அரசியல். ஆம், கல்வியும் சமூக அரசியல் பாடங்களும் பிரிக்க முடியாதவை. பின்லாந்து பள்ளிக்கல்வித் துறையின் புதிய முன்னெடுப்பாக, மாணவர்களுக்காக அரசியல் வகுப்புகள், விலைவாசி முதல் சுகாதாரக் கட்டமைப்பு வரையிலான விவாதங்கள், அதனைத் தொடர்ந்து மாணவத் தேர்தல், வாக்குப் பரப்புரைகள் எனச் செயல்படுத்தப்படுகிறது.



1944இல் இரண்டாம் உலகப் போர் காலகூட்டத்தில் அமைந்த பின்லாந்து கூட்டணிக் கட்சி ஆட்சி, நாடாளுமன்றத்தில் அரசியல் கல்வி தொடர்பில் விவாதித்தது. கல்வித் துறை வடிவமைப்பில் அரசியல் குழுவினரின் வழிகாட்டலை இது உறுதி செய்தது. 'கல்வி - சமூகம் - அரசியல்' என்ற இணைப்பை இது கல்வித் திட்டத்தில் கொண்டுவந்தது. இதன் தாக்கம் இன்றைய சமூக மேம்பாட்டில் பிரதிபலிக்கிறது!

அடுத்தடுத்தக் கட்டுரைகளில் எல்லாவற்றையும் ஆழமாகப் பார்ப்போம்!

*இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.10.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781*